ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM · VARALARUU · PUDUGAIVARALARU · VARALARUU · 7502051351




செவ்வாய் ❖ நவம்பர். 28, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 54 ❖ ரூ.10

## "சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்த வேண்டும்"

# வலியுறுத்தல்

### தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக்கெடுப்பையும் மத்திய அரசு நடத்தவேண்டும்;முதல்வர் ஸ்டாலின்



சென்னை, நவ. 28–

பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும். பட்டியலின – பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும்.சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும்" என்று வி.பி.சிங் சிலை திறப்பு விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி.சிங்கின் முழுதிருவுருவச்சிலையை திறந்துவைத்து,சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பேசியது: "இந்தியா முழுமைக்கும் பரவி இருக்கின்ற சமூக நீதிக் குடும்பத்தைசேர்ந்தவர்கள் நாங்கள். வி.பி.சிங்குக்கு சிலை வைப்பது மூலமாக அவருடைய புகழ் உயருகிறது என்று பொருள் இல்லை; நாம் அவருக்கு காட்டவேண்டியநன்றியை காட்டி இருக்கிறோம். காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதிக் கதவை திறந்து வைத்தவர் வி.பி.சிங் . தன்னுடைய பிரதமர் பதவி போனாலும் பரவாயில்லை என்று அதில்உறுதியாகஇருந்தவர் வி.பி.சிங். அவருக்கு சிலை அமைப்பதை இந்த திராவிட மாடல் அரசு தன்னுடைய கடமையாக கருதுகிறது. சமூகநீதியை காக்கின்ற கடமையில் இருந்து இம்மியளவும் வழுவாமல்இந்ததிராவிட மாடல்அரசுசெயல்பட்டு வருகிறது.

வி.பி.சிங் 1969–ம் ஆண்டு உத்தரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்.உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதல்வர். இந்திய ஒன்றியத்தில் வர்த்தக அமைச்சர், நிதி அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய உயர்பதவிகளை வகித்தார். தேசிய முன்னணியை உருவாக்கி 1989–ம் ஆண்டு இந்தியாவின் பிரதமராகவே ஆனார். வி.பி.சிங் பிரதமராக இருந்தது பதினோரு மாதம்தான் என்றாலும், அவர் செய்த சாதனை என்பது மகத்தானவை. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப் பட்டப்போது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குஅவர்களுடைய மக்கள்தொகைக்கு ஏற்ப, இடஒதுக்கீடு தரப்படவில்லை. அதை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்தான் பி.பி. மண்டல்தலைமையிலான ஆணையம்.

சமூக ரீதியாவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படுகின்ற சமூகத்துக்கு மத்திய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பி.பி. மண்டல் பரிந்துரையின் உத்தரவை அமல்படுத்திய சமூகநீதிக் காவலர்தான் வி.பி.சிங்.அவர் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல. ஏன், ஏழை எளிய குடும்பத்தைச்சேர்ந்தவரும் அல்ல. ஆனாலும் ஏழை , எளிய, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இடஒதுக்கீட்டைச் சாத்தியப்படுத்திக் காட்டியவர். அப்போது நாடாளுமன்றத்தில் பெரியார், அம்பேத்கர், ராம் மனோகர் லோகியா ஆகிய மூவருடைய பெயரைத்தான் வி.பி. சிங் குறிப்பிட்டார். பெரியாருக்குத் தனிப்பட்ட நன்றியை நாடாளுமன்றத்தில் பதிவு செய்தார்.

அவர் பதவியில் இருந்த பதினோருமாதகாலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு தொடக்கப்புள்ளி,தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு தொடக்கப்புள்ளி,வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை உருவாக்கியது,லோக்பால் சட்டத்துக்கு தொடக்க முயற்சிகள், தேர்தல் சீர்திருத்தங்கள், அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது, நாடாளுமன்றத்தின் நடுவே அம்பேத்கர் படம், மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில், உழவர்கள் பிரச்சினையைத் தீர்க்க மூன்று குழுக்கள், டெல்லி குடிசைப்பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள், அதிகபட்ச சில்லறைவிற்பனைவிலை (MRP) அச்சிட உத்திரவு, நுகர்வோர் பாதுகாப்பு, என இன்னும் பட்டியல் நிறைய இருக்கிறது.

இப்படி பல சாதனைகளை செய்து காட்டிய மாபெரும் சாதனையாளர்தான் நம்முடைய வி.பி.சிங். மதிப்புக்குரிய சமூகநீதிக் காவலர் வி.பி.சிங்கின் முயற்சியால்தான் இன்றைக்குப் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒரு அடியாவது முன்னேறியிருக்கிறார்கள். நாம் இன்னும் பல உயரங்களுக்குச் செல்லவேண்டும். நமக்கான உரிமைகள் இன்றைக்கும் கூட முழுமையாககிடைக்காத, கிடைக்க முடியாத சூழல்தானே நிலவுகிறது.

தமிழக மக்களுடைய உயிர் பிரச்சினையான காவிரி நீருக்காக பல ஆண்டுக்கு பிறகு, பல போராட்டத்துக்கு பிறகு, தலைவர் கருணாநிதியுடையை கோரிக்கை ஏற்று, வி.பி. சிங் ஆட்சியில் தான் காவிரி நடுவர் மன்றத்தை அமைத்துத் தந்தார். தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக்கெடுப்பையும் மத்திய அரசு நடத்தவேண்டும். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும். பட்டியலின–பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும். சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும். இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதி செய்ய அனைத்து கட்சி எம்.பிக்கள் கொண்ட குழு அமைக்கப்படவேண்டும். இதனையெல்லாம் அகில இந்திய அளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்படவேண்டும்.

சமூக நீதிக் காவலர் வி.பி.சிங்கின் சிலை திறப்பு நாளில் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய உறுதிமொழி; "இந்தியா முழுமைக்கும் வாழும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின,பழங்குடியின, சிறுபான்மை, விளிம்பு நிலை மக்களுடைய உயர்வுக்கான "அரசியல் செயல்திட்டங்கள்" "அரசின் செயல்திட்டங்களாக" மாற்றிஅமைக்கஇன்றைக்கு உறுதி ஏற்போம்" என்று முதல்வர் பேசினார்.



தமிழ்நாடு முதலமைச்சரும் தனது தந்தையுமான மு.க. ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்து பெற்றார். அருகில் துர்கா ஸ்டாலின் உள்ளார்.

## டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கை : அரசுக்கு இபிஎஸ் வலியுறுத்தல்



சென்னை, நவ. 28–

டெங்கு காய்ச்சல் பரவலை போர்க்கால அடிப்படையில் கட்டுப்படுத்த, இம்மழைக் காலத்தில் உடனடியாக தமிழகம் முழுவதும் தொடர்ந்து காய்ச்சல் முகாம்களை அதிக அளவில் நடத்தி டெங்கு, ஃப்ளு, டைபாய்ட் போன்ற விஷக் காய்ச்சல்களைக் கண்டறிந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகத் தேவையான மருத்துவ உதவிகளை அளித்திட வேண்டும் என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகம் முழுவதும் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருவதையும், சுமார் இரண்டு மாதங்களில் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், ஒரு சில உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு, இனியாவது இந்த திமுக அரசும், சுகாதாரத் துறையும் விழித்துக்கொண்டு தமிழகம் முழுவதும் அதிமுகவின் ஆட்சியில் நடத்தியதைப் போன்று காய்ச்சல் முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்களை நடத்தி, நோய்களைக் கண்டறிந்து அவற்றை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, 30.7.2023, 29.9.2023 ஆகிய தேதிகளில் வெளியிட்டுள்ள எனது அறிக்கைகள் மற்றும் பேட்டிகளின் வாயிலாக திமுக அரசை வலியுறுத்தி இருந்தேன். ஆனால், திமுக அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் எப்போதும் போல் தனது துறை சரியாக செயல்படுவதாக பேட்டி அளித்துவிட்டு, பெயரளவுக்கு ஓரிரு நாள் மட்டும் காய்ச்சல் முகாம்களை நடத்திவிட்டு, மாரத்தான் போட்டிகளை நடத்துவதற்கு சென்றுவிட்டார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதுரை மாநகராட்சிப் பகுதியில் 1 வயது குழந்தை, 2 சிறுவர்கள் உள்ளிட்ட 4 பேர்; புறநகர் பகுதிகளில் 5 சிறுவர்கள் உள்ளிட்ட 9 பேர் என்று மொத்தம் 13 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும், மதுரை மாவட்டம் முழுவதும் டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிய வருகிறது. இதேபோன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை, ஒரே நாளில் மதுரையில் 67 பேர் சாதாரண காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும்; மாவட்டம் முழுவதும் சாதாரண காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருவதாகவும்; கடந்த 30 நாட்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சாதாரண காய்ச்சல் பாதிப்புக்கு ஆளாகி உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோல், புதுக்கோட்டையில் ஓரிரு நாளில் புதிதாக 59 பேருக்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும், இதுவரை காய்ச்சலால் 229 பேர் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும், ஏற்கெனவே, டெங்கு காய்ச்சலுக்கு சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தமிழகத்தில் நிலவும் அவலங்களை சுட்டிக்காட்டும் போது, அதிலுள்ள உண்மைகளைப் புரிந்துகொண்டு, தமிழக மக்களின் நலன் சம்பந்தமான நடவடிக்கைகளை உடனடியாக செயல்படுத்த வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கும், திமுக அரசுக்கும் உண்டு.

ஆனால், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளிவழங்கி, பின்புறவாசல் வழியாக பதவியேற்ற இந்த திமுக அரசின் முதல்வரும், அமைச்சர்களும், எப்போதும் போல், எனது தலைமையிலான அதிமுக அரசில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை தாங்கள் செய்ததாக ஸ்டிக்கர் ஒட்டி விளம்பரப்படுத்துவதிலேயே உள்ளனர்.

உதாரணமாக, சென்னை மத்திய கைலாஷ் அருகில் உள்ள சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 2019–ம் ஆண்டு எனது தலைமையிலான ஆட்சியில் சுமார் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 'யு' வடிவ பாலங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 2 வருடங்களில் மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர திட்டமிடப் பட்டிருந்தது. கரோனா தொற்றால் இப்பணி தாமதமாகியது. ஆனால், இந்த அரசு பதவியேற்று 30 மாதங்கள் கழித்து, சென்ற வாரம்தான் இரு பாலங்களில் ஒன்றை மட்டும் திறந்து வைத்து, தங்கள் ஆட்சியில் செய்ததாக ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டுள்ளது. மற்றொன்றை எப்போது கட்டி முடித்து பயன்பாட்டுக்குக் கொண்டு வருவார்கள் என்று, அப்பகுதியில் பயணம் செய்யும் மக்கள் ஏக்கத்துடன் காத்துக்கொண்டுள்ளனர். இந்த அரசின் குறைகளை எனது அறிக்கைகள் மூலம் குறிப்பிட்டு வெளியிடுகிறேன். எனவே, நான் அறிக்கைகளில் சுட்டிக்காட்டிய குறைகளை உடனடியாகக் களைய இந்த திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

குறிப்பாக, இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள டெங்கு காய்ச்சல் பரவலை போர்க்கால அடிப்படையில் கட்டுப்படுத்த, இம்மழைக் காலத்தில் உடனடியாக தமிழகம் முழுவதும் தொடர்ந்து காய்ச்சல் முகாம்களை அதிக அளவில் நடத்தி, டெங்கு, ஃப்ளு, டைபாய்ட் போன்ற விஷக் காய்ச்சல்களைக் கண்டறிந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகத் தேவையான மருத்துவ உதவிகளை அளித்திட வேண்டும் என்று இந்த திமுக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## "140 கோடி இந்தியர்களின் நலனுக்காக திருப்பதியில் பிரார்த்தனை செய்தேன்" – பிரதமர் மோடி

திருப்பதி, நவ. 28–

பிரதமர் நரேந்திர மோடி நேற்று திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். அது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில்,"140 கோடி இந்தியர்களின் நல் ஆரோக்கியம், நலன் மற்றும் வளமான வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மோடி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஹைதராபாத்தில் இருந்து தேர்தல் பிரச்சாரங்களை முடித்துக் கொண்டு, தனி விமானம் மூலம் ரேணிகுண்டா விமான நிலையம் வந்தடைந்தார். அவரை அங்கு ஆந்திர ஆளுநர் அப்துல் நசீர், முதல்வர் ஜெகன்மோகன், துணை முதல்வர் நாராயணசாமி, அமைச்சர் பெ. ராமசந்திராரெட்டி, தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் கருணாகர் ரெட்டி, எம்பிக்கள் மிதுன் ரெட்டி, குருமூர்த்தி, ரெட்டப்பா, டிஜிபி ராஜேந்திர நாத், முதன்மை செயலாளர் ஜவஹர் ரெட்டி உள்ளிட்டோர் வரவேற்றனர். பின்னர், பிரதமர் மோடி சாலை மார்க்கமாக திருமலை சென்றடைந்தார். அங்கு, தேவஸ்தான நிர்வாக அதிகாரி தர்மாரெட்டி உட்பட பலர் பூங்கொத்து கொடுத்தும், பொன்னாடை போர்த்தியும் வரவேற்றனர்.



இரவு திருமலையில் தங்கிய பிரதமர் மோடி நேற்று காலை 8 மணிக்கு சாமி தரிசனம் செய்ய திருமலை திருப்பதி கோயிலுக்கு பிரதமர் மோடி வந்தார். அங்கே சாமி தரிசனம் செய்தார். அவருக்கு வேத மந்திரங்கள் முழங்கி பண்டிதர்கள் வாழ்த்து தெரிவித்தனர். சாமி தரிசனத்தை முடித்துக் கொண்ட அவர் டெல்லி புறப்பட்டுச் சென்றார்.

தெலுங்கானா மாநில தேர்தல் பிரச்சாரம் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இன்று மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைய உள்ளது. இதனால் அனைத்து கட்சி தலைவர்கள், முக்கிய நிர்வாகிகள் என பலர் தெலங்கானாவில் கடந்த சில நாட்களாக முகாமிட்டு, சூறாவளி பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதில், பாஜகவிற்கு ஆதரவாக பிரதமர் நரேந்திர மோடி, அமித்ஷா உள்ளிட்டோர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக மேதக் மாவட்டத்தில் பேசிய பிரதமர் மோடி,"மக்களை சந்திக்காத, தலைமைச் செயலகத்துக்கே வராத, பண்ணை வீட்டிலேயே வசதியாக வாழும் ஒரு முதல்வர் நமக்கு தேவையா? சந்திரசேகர ராவ் பொய் வாக்குறுதிகளை கொடுத்து ஆட்சியை பிடித்துள்ளார். அவரை விவசாயிகள் எப்போதும் மன்னிக்க மாட்டார்கள். கடவுளே கூட மன்னிக்கமாட்டார்" என்று விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

என்னிடம் சிறப்பான
தனித்திறமை என்று
எதுவுமே இல்லை

என்னிடம் இருப்பது
ஆர்வம் மட்டுமே!




# "முஸ்லிம்களுக்காக ஐடி பார்க் உருவாக்குவது சாத்தியமில்லாதது"

## கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தகவல்



புதுடெல்லி : நவ. 28, முஸ்லிம்களுக்காக ஐடி பார்க் உருவாக்குவேன் என சாத்தியமில்லாத வாக்குறுதியை தெலங்கானா முதல்வர் கே.சந்திரசேகர ராவ் கூறி இருக்கிறார் என்று கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவரும், துணை முதல்வருமான டி.கே.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று வரும் ராஜஸ்தான் உள்பட 5 மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. முஸ்லிம்களுக்காக ஐடி பார்க் உருவாக்கப்படும் என தெலங்கானா முதல்வர் கேசிஆர் வாக்குறுதி அளித்துள்ளது குறித்து கேட்கிறீர்கள். அது எப்படி சாத்தியமாகும்? சிறுபான்மையினருக்காக என்று தனியாக ஐடி பார்க் அமைக்க முடியுமா? ஒட்டுமொத்த நாட்டிலும் இதுபோன்ற ஒரு கொள்கையை நான் வேறு எங்கும் கேட்டதில்லை.

நீங்கள் இளைஞர்களுக்காக, பெண்களுக்காக என்று கொள்கைகளை வகுக்கலாம். சாதிவாரியாக மக்களை பாகுபடுத்த முடியாது. கேசிஆர் பலவீனமாக தன்னை உணருகிறார் என்பதையே இது காட்டுகிறது. இளைஞர்கள், குழந்தைகள், பெண்கள் ஆகியோர் தங்களை சாதி ரீதியாக அடையாளப் படுத்திக்கொள்வது இல்லை. நீங்கள் சிறுபான்மையினரை, பட்டியல் சமூகத்தவர்களை ஊக்குவிக்கலாம். ஆனால், அவர்களுக்கென்று தனியாக ஐடி பார்க் உருவாக்க முடியாது" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தெலங்கானா கல்வி அமைச்சர் சபிதா இந்திரா ரெட்டி போட்டியிடும் மாகேஸ்வரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய கேசிஆர், "பிஆர்எஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், முஸ்லிம் மாணவர்கள் தங்கி படிக்கும் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும். மேலும், முஸ்லிம் இளைஞர்களுக்கு என்று தனியாக ஐடி பார்க் உருவாக்கப்படும். இந்த ஐடி பார்க், ஹைதராபாத் அருகே பஹடி ஷரீஃப் பகுதியில் அமைக்கப்படும். காங்கிரஸ் ஆட்சியின்போது தெலங்கானாவில் இருக்கும் சிறுபான்மையினருக்காக ரூ.2 ஆயிரம் கோடி மட்டுமே செலவிடப்பட்டது. பிஆர்எஸ் ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளில் ரூ.12 ஆயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளது" என தெரிவித்திருந்தார்.

# நற்சாந்துபட்டியில் மகளிர் மற்றும் எலும்பு, மூட்டு நல சிறப்பு முகாம்



புதுக்கோட்டை , நவ. 28–

புதுக்கோட்டை, நற்சாந்துபட்டியில், நற்சாந்துபட்டி சமூக நல அறக்கட்டளையின் சார்பாக, மகளிர் மற்றும் எலும்பு, மூட்டு நல சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் மகளிருக்கான சிறப்பு மருத்துவர்கள் ஜானகிரவிக்குமார் மற்றும் நுண்கதிர் இயக்குனர் மருத்துவர் லட்சுமி பிரியா ஆகியோர் கலந்து கொண்டு, மகளிருக்கு ஏற்படும் நோய்களான, கர்ப்பப்பை சார்ந்த நோய்கள், மாதவிடாய் பிரச்சனைகள், மார்பக புற்றுநோய் மற்றும் கருவுற்ற தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களுக்கான மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார். அவர்களது ஆலோசனைப்படி ரத்த பரிசோதனைகள், கர்ப்பப்பைவாய்-புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் ஊடுகதிர் பரிசோதனைகள் செய்யப்பட்டது.

அதேபோல எலும்பு, மூட்டு ஆலோசனைக்கான சிறப்பு மருத்துவ முகாமானது, மூத்த மருத்துவர். ரவிக்குமார் மற்றும் இயன்முறை சிகிச்சை மருத்துவர். அசோக்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் முதுகு வலி, மூட்டு வலி, கழுத்து தோள்பட்டை வலி மற்றும் எலும்பு சார்ந்த அனைத்துப் பிரச்சனைகளுக்கும், மருந்துகளும், மேல் சிகிச்சைக்கான ஆலோசனைகளும் பரிந்துரைகளும் வழங்கப்பட்டன. இந்த மருத்துவ முகாமிற்கு சாத்தப்பன் செட்டியார் வரவேற்புரையும், டத்தோ.லெ.மெய்யப்ப செட்டியார் நன்றியுரையும், மருத்துவர் ராமமூர்த்தி வாழ்த்துரையும் வழங்கினர். விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி பேராசிரியர் முத்துக்குமார் செய்திருந்தார். முகாமில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.




# மதுரை டேக் சிபிஎஸ்சி பள்ளியில் அறிவியல் கண்காட்சி



மதுரை , நவ. 28–

மதுரை டேக் சிபிஎஸ்சி பள்ளியில் அறிவியல் மற்றும் கலை கண்காட்சி நடைபெற்றது. பள்ளியின் தாளாளர்கள் மங்கள்ராம், காயத்ரி மங்கள்ராம் தலைமை வகித்தனர். எட்டாம் வகுப்பு மாணவன் ஜெப்ரி அனைவரையும் வரவேற்றார்.

பள்ளியின் முதன்மை முதல்வர் டாக்டர் சந்திரசேகர் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார். தியாகராஜா பொறியியல் கல்லூரியில் முதல்வர் டாக்டர் பழனிநாத ராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். மேலும் மதுரா மில் தலைவர் தாமோதரக்கண்ணன், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் செயலாளர் விஜயராகவன் மற்றும் மதுரை மாவட்டம் கைத்தறி தொழிற்சாலை செயலாளர் எஸ்.பி.சர்வேஸ்வரன் ஆகியோரும் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர். பின்னர் சிறப்பு விருந்தினர்கள் அறிவியல் மற்றும் கலை நுட்பத்தின் முக்கியத்துவத்தை குறித்து விவரித்தனர்.

இந்தக் கண்காட்சியில் இயற்பியல் வேதியியல், தாவரவியல் விலங்கியல் மற்றும் கலை சார்ந்த 100க்கும் மேற்பட்ட மாணவமாணவியர்களின் படைப்புகள் இடம் பெற்று இருந்தன. கண்காட்சியில் 1500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டு கண்காட்சியை சிறப்பு செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை பள்ளியின் முதல்வர் அனிதா தலைமையில் ஒருங்கிணைப்பாளர் சிந்துஜா மக்கள் தொடர்பு மேலாளர் ரகுராம் செல்வகுமார் விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் சிராஜுதீன், சுரேஷ் மற்றும் ஆசிரிய ஆசிரியர்கள் செய்து இருந்தனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் டெங்குவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 200–ஐ தாண்டியது : மக்கள் பீதி



புதுக்கோட்டை : நவ. 28, புதுக்கோட்டை மாவட்டத்தில் டெங்குவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 200-ஐ தாண்டியது.

தமிழகத்தில் பருவமழை தொடங்கியிருப்பதால் மழைக்கால நோய்களும் அதிகரித்துள்ளன. குறிப்பாக சாதாரண சளி, காய்ச்சல்களுக்கு மத்தியில் டெங்கு காய்ச்சல், மலேரியா, டைப்பாய்டு போன்ற காய்ச்சல்களால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். டெங்கு காய்ச்சலும் அதிகமாக பரவி வருகிறது. தமிழக அரசும் மழைக்கால நோய்களை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில், டெங்கு காய்ச்சல் காரணமாக புதுக்கோட்டையில் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 200ஐ தாண்டி இருப்பது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தின் தொடக்கத்தில் இருந்தே டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரிக்க தொடங்கியது. தற்போது ஒரே நாளில் 59 பேர் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டு உள்ளார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலை தடுக்க சுகாதாரத்துறையினர் கண்காணிப்பு மற்றும் தடுப்பு பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதேபோல், மதுரையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 13 பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் மதுரையில் டெங்கு பாதிப்பு 100ஐ தாண்டியது. கோவையில் ஒரே மாதத்தில் 10 பேருக்கு பன்றி காய்ச்சல் உறுதியாகியுள்ளது. கோவையில் கடந்த 2 வாரங்களில் வைரஸ் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்துள்ளது. தமிழகத்தில் தினசரி 40 முதல் 50 பேர் டெங்குவால் பாதிக்கப்படுகின்றனர். தற்போது வரை சுமார் 7 ஆயிரம் பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டு நலம் பெற்றுள்ளனர். இனி வரும் நாட்களில் டெங்கு பாதிப்பு குறையும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்

# டிச.2–ல் கூடுகிறது அனைத்துக் கட்சி கூட்டம் – மத்திய அரசு அறிவிப்பு



புதுடெல்லி, நவ. 28–

நாடாளுமன்றக் குளிர்கால கூட்டத் தொடர் வரும் டிசம்பர் 4ம் தேதி கூட உள்ள நிலையில், டிசம்பர் 2-ம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் கடைசி கூட்டத் தொடர் டிசம்பர் 4 ஆம் தேதி முதல் 22 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பை மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி கடந்த 9 ஆம் தேதி அறிவித்தார். வழக்கமாக நாடாளுமன்றக் கூட்டத் தொடர் கூடுவதற்கு ஒரு நாள் முன்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்படும். ஆனால், டிசம்பர் 3 ஆம் தேதி 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாக உள்ளதால், இம்முறை ஒரு நாள் முன்னதாகவே அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதோடு, ஐபிசி, சிஆர்பிசி, ஆவணச் சட்டம் ஆகியவற்றுக்கு மாற்றாக மூன்று புதிய சட்டங்களை மத்திய அரசு இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்ற முயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதோடு, திரிணாமூல் காங்கிரஸ் எம்பி மஹுவா மொய்த்ரா, தொழிலதிபர் ஹிராநந்தானியிடம் பணம் பெற்றுக்கொண்டு அவர் விரும்பிய கேள்விகளை நாடாளுமன்றத்தில் எழுப்பிய விவகாரம் குறித்து நாடாளுமன்ற நெறிமுறைக் குழு விசாரித்து அளித்த அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்படும் நோயாளிகளின் உதவியாளர் தங்க ஏசி அறை : டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை



புதுடெல்லி : நவ. 28–

நோயாளிகளின் உதவியாளர்கள் வசதிக்காக, ஐசியு வார்டுகளில் குளிரூட்டப்பட்ட காத்திருப்பு அறை, செல்போன் சார்ஜிங் பாயிண்ட், வழிபாட்டு அறை உள்ளிட்ட வசதிகளை மேற்கொள்ள எய்ம்ஸ் மருத்துவமனை நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக தலைநகர் மட்டுமின்றி அண்டை மாநிலங்களை சேர்ந்த பலரும் வருகின்றனர். இதனால் அதிக அளவில் கூட்டம் நிரம்பி வழியும். இதனால் டெல்லியில் குளிர் அதிகரித்து காணப்படும் டிசம்பர் மாதங்களில் எய்ம்ஸ் வளாகத்தின் வெளியிடங்களில் நோயாளிகளின் உறவினர்கள் திறந்தவெளியில் காத்துகிடப்பர். அவர்களுக்காக தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்படுவது வாடிக்கை.

இந்நிலையில், மருத்துவமனையில் நோயாளிகளின் அருகே அவர்களுக்கு உதவுவதற்காக உடனிருப்பவர்கள் தங்குவதற்கு எய்ம்ஸ் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. குறிப்பாக, ஐசியு பிரிவு நோயாளிகளின் உறவினர்களுக்கு காத்திருப்பு அறையை தயார் செய்துள்ளது. இது மட்டுமின்றி நாற்காலிகள் உடன் இணைந்த படுக்கைகள், மொபைல் சார்ஜிங் பாயிண்ட்கள், பல்வேறு மதத்தை சார்ந்தவர்களுக்கான பிரார்த்தனை கூடங்கள் உட்பட பல அடிப்படை வசதிகளை ஐசியு வார்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. அனைத்து காத்திருப்புப் பகுதிகளிலும் ஏர் கண்டிஷனிங் செய்யவும் எய்ம்ஸ் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இது மட்டுமின்றி, நோயாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களின் உடைமைகளை பாதுகாப்பாக வைக்க லாக்கர்கள், குடிநீர் வசதி, ஆரோக்கியமான தின்பண்டங்கள் மற்றும் பேக் செய்யப்பட்ட பானங்கள் வழங்கும் இயந்திரங்கள், இண்டர்காம் வசதி, ஆண் மற்றும் பெண்களுக்கான கழிப்பறைகள், சிசிடிவி கேமராக்கள் மற்றும் நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் பாதுகாப்புக் காவலாளிகளை வரும் காலங்களில் நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி எய்ம்ஸ் நிர்வாக அதிகாரிகள் கூறுகையில், நோயாளிகளின் உதவியாளர்களுக்கு ஏற்ப, காத்திருக்கும் பகுதி அமைதியான மண்டலமாக உருவாக்கப்பட உள்ளது. எல்லா நேரங்களிலும் மொபைல் சிக்னல்கள் கிடைக்காமல் போகலாம் என்பதால், நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களில் உள்ள காவலர்கள் இண்டர்காமில் அழைப்புகளைப் பெறும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அந்தந்த ஐசியுவில் தேவைப்பட்டால் உதவியாளர்களுக்குத் தெரிவிப்பார்கள். அதே இண்டர்காம் வசதியை உதவியாளர்கள் அவசர மற்றும் குறுகிய கால தொலைபேசி அழைப்புகளுக்கும் பயன்படுத்த முடியும். இந்த வசதிகள் செய்யப்படுவது பற்றி ரெசிடென்ட் மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் வினய் குமார் மகிழ்ச்சி தெரிவித்தார்.

# 'ரிது பந்து திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குவதை நிறுத்துக' தெலங்கானா அரசுக்கு தேர்தல் ஆணையம் வலியுறுத்தல்



ஹைதராபாத், நவ. 28–

தெலங்கானாவில் 'ரிது பந்து' திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்க கேசிஆர் அரசுக்கு கொடுத்த அனுமதியை தேர்தல் ஆணையம் நேற்று திரும்பப் பெற்றுள்ளது. இந்தத் திட்டம் குறித்து ஆளுங்கட்சி அமைச்சர் அறிக்கை வெளியிட்டதைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் மீறிப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

தெலங்கானாவில் விவசாய செலவுகளை சந்திக்கவும், பயிர் உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும் விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் கடந்த 2018-ம் ஆண்டு 'ரிது பந்து' திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ராபி பருவத்துக்கு ரூ.5,000 பணம் வழங்கப்பட்டடு வருகிறது.

இந்தாண்டு அக்டோபர் - ஜனவரி பருவத்துக்கான தொகையினை வழங்குவதற்கு தெலங்கானாவின் கேசிஆர் அரசுக்கு தலைமை தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கி இருந்ததது. என்றாலும் தேர்தல் நடத்தை விதி நடைமுறைக்கு வந்த பின்னர் பணப்பட்டுவாடா குறித்து விளம்பரப்படுத்த வேண்டாம் என்று அரசிடம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் தெலங்கானா மாநில நிதியமைச்சரும், பிஆர்எஸ் கட்சி வேட்பாளருமான ஹரிஷ் ராஜ் 'ரிது பந்து. திட்டத்தின் கீழ் பணப்பட்டுவாடா குறித்து அறிக்கை வெளியிட்டிருந்தார். இதனை கவனத்தில் எடுத்துக்கொண்ட தேர்தல் ஆணையம் தான் வழங்கிய அனுமதியை திரும்பப் பெறுவதாகவும், விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்குவதை நிறுத்த வேண்டும் என்று மாநில அரசிடம் தெரிவித்திருக்கிறது.

இது குறித்த அறிக்கையில், "தெலங்கானா மாநிலத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அதன் அனைத்து வடிவங்களில் நடைமுறைப் படுத்தப்பபடுவதை உறுதி செய்யும் வகையில், 'ரிது பந்து' திட்டத்தின் கீழ் பணப்பட்டுவாடா செய்யப்படுவது நிறுத்தப்படுகிறது" என்று தெரிவித்துள்ளது. இந்த அனுமதி திரும்பப் பெறுவது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் மாநிலத் தேர்தல் ஆணையத்துக்கு தகவல் தெரிவித்துள்ளது.

தெலங்கானாவில் உள்ள 119 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 30 (வியாழக்கிழமை) வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதில் பிஆர்எஸ், காங்கிரஸ், பாஜகவுக்கு இடையே கடும் போட்டி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

# அறந்தாங்கி அருகே கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாட்டுவண்டி எல்கைப்பந்தயம்



அறந்தாங்கி , நவ. 28–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே வெட்டிவயல் - கருங்குழிக்காடு கிராமத்தார்கள் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி பந்தயம் நடைபெற்றது.

பெரியமாடு, நடுமாடு, கரிச்சான்மாடு, புதுப்பூட்டு என நான்கு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் புதுக்கோட்டை, தஞ்சை திருச்சி, மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட 120-க்கும் மேற்பட்ட இரட்டை மாட்டுவண்டிகள் போட்டியில் கலந்து கொண்டன போட்டியில் கலந்து கொண்ட இரட்டைமாட்டு வண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தய இலக்கினை நோக்கி சீறிப்பாய்ந்தன

போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு மொத்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசும் கோப்பைகளும் வழங்கப்பட்டது. அறந்தாங்கி சுற்றுவட்டார பகுதியில் இருந்து பந்தய ரசிகர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் சாலையின் இருபுறமும் நின்று கண்டு ரசித்தனர்.

### ஆரணி இளைஞரணி சார்பில்

## உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கட்சி கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்



ஊத்துக்கோட்டை, நவ28-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செயலாளரும்,விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பேரூர் திமுக இளைஞரணி சார்பில் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இதை முன்னிட்டு ஆரணி பஸ் நிறுத்தம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து கட்சியின் கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும்நிகழ்ச்சிநடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து தலைமை தாங்கினார். அனைவரையும் பேரூர் திமுக இளைஞரணி அமைப்பாளர் ஆர்.பார்த்திபன் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில், நிர்வாகிகள் டி.கண்ணதாசன்,கு கரிகாலன், டி.கோபிநாத்,டி. நிலவழகன், ஆர்.கலையரசி, சுபாஷினி, டி.ஜெயகுமார்,டி.எஸ். குருவப்பா,ஜி.பாஸ்கர், டி.எஸ். பாலகுருவப்பா, சி.நீலகண்டன், கே.நாகராஜ், சாலிக், சூர்யா, புதுநகர் பாலாஜி, கே.ஆர். சீனு, எஸ்.வேலு, ஆர்.ரவி, எஸ்.பி.உமாபதி, சாய் சத்யம், டி.தமிழ்ச்செல்வன், ஆர். வசந்தகுமார்,பிரபு குமார், சந்தோஷ்,ராமு,ஏ.ஆறுமுகம், வக்கீல் சுரேந்தர், டி.பாஸ்கர், ஈஷா ஜாவித், வி.முரளி, வி.கே. எம்.விஜயகுமார், கே.வேலு, வெங்கடேசன், ரவி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தரங்கம்பாடியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்





தரங்கம்பாடி, நவ.28-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூராட்சி திமுக சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சரும், மாநில இளைஞர் அணி திமுக செயலாளருமான உதயநிதி ஸ்டாலினின் பிறந்த விழா நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம் முருகனின் அறிவுறுத்தலின் படி தரங்கம்பாடி பேரூராட்சி திமுக அலுவலகம் முன்பு பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா தலைமையில் பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா திமுகவினரால் கொண்டாடப்பட்டது. இதில் நகர கழக பொறுப்பாளர்கள், வார்டு கவுன்சிலர்கள், வார்டு செயலாளர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மனவளர்ச்சி குன்றிய காப்பக பள்ளியில்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா உணவு அளித்து கொண்டாடிய திமுக கவுன்சிலர்





தரங்கம்பாடி, நவ.28-

தமிழகம் முழுவதும் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சரும், மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாடினர். அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கை பேரூராட்சி 6-வது வார்டில் உள்ள கிருபாலையம் மனவளர்ச்சி குன்றியோர் காப்பக பள்ளியில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் அறிவுறுத்தலின் பேரில் கிருபாளையம் மன வளர்ச்சி குன்றியோர் காப்பகப் பள்ளியில் 6-வது வார்டு கவுன்சிலர் செந்தாமரைச்செல்வி ரமேஷ் ஏற்பாட்டில் 35-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு 20 பாய் மற்றும் உணவு வழங்கும் நிகழ்ச்சி தரங்கைப் பேரூர் மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் நகரச் செயலாளர் முத்துராஜா, 9-வது வார்டு கவுன்சிலர் ஜோன்ஸ் செல்லப்பா வார்டு கிளைச் செயலாளர் சாத்ராக், வார்டு திமுக பொறுப்பாளர்கள் அர்ஜுனன், கணேசன், வசந்தகுமார், ரவி, மை.செல்வம், இளையராஜா, அழகிரி மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர். உணவு வழங்கும்பொழுது மனவளர்ச்சி குன்றிய பள்ளி மாணவமாணவிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு உணவளித்த கவுன்சிலருக்கு நன்றிகளை தெரிவித்தனர்.

## கரூரில் பரபரப்பு : ஓடும் வேனில் பொறியியல் கல்லூரி மாணவன் கழுத்தை கத்தியால் சகமாணவர் அறுத்ததால் அதிர்ச்சி



கரூர் : நவ. 28, குளித்தலை அருகே தனியார் கல்லூரி வாகனத்தில் பொறியியல் மாணவரின் கழுத்தை, எம்.பி.ஏ. மாணவர் திடீரென அறுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கரூர் மாவட்டம் குளித்தலை அருகே முசிறியை சேர்ந்த பெரியசாமி மகன் நிதிஷ்குமார். இவர் புலியூர் செட்டிநாடு இன்ஜினியரிங் கல்லூரியில் இன்ஜினியரிங் 3ம் ஆண்டு படித்து வருகிறார். இவர் வழக்கம் போல் தன்னுடைய வாகனத்தில் ஏறி முசிறியில் இருந்து குளித்தலை வழியாக அய்யர்மலை சாலையில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது தொட்டியத்தை சேர்ந்த அதே கல்லூரியில் படிக்கும் எம்.பி.ஏ. மாணவன் அண்ணாமலை என்பவர் திடீரென தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த சூரி கத்தியால் நிதிஷ்குமாரின் கழுத்தை அறுத்துள்ளார். இதில் படுகாயமடைந்த மாணவரின் அலறல் சத்தத்தை கேட்ட வேன் டிரைவர், வாகனத்தை உடனடியாக குளித்தலை அரசு மருத்துவமனைக்கு ஓட்டிச் சென்று சிகிச்சைக்காக நிதிஷ்குமாரை அனுமதித்துள்ளார். சம்பவம் குறித்து தகவல் அறிந்த குளித்தலை போலீசார், அண்ணாமலை என்ற மாணவனை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நிதிஷ்குமார் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். முதற்கட்ட விசாரணையில், நிதிஷ்குமாரிடம் அண்ணாமலை மிக நெருக்கமாக பழகி வந்துள்ளார். எப்போதும் ஒன்றாகவே இருவரும் கல்லூரி வேனில் அமர்ந்து சென்று வந்துள்ளனர். ஒருகட்டத்தில் தன்னுடன் நெருங்கி பழகி வருவதை நிதிஷ்குமார் வெறுத்து அண்ணாமலையிடம் பேசுவதை நிறுத்தியுள்ளார். கடந்த 2 நாட்களுக்கு முன்பு நிதிஷ்குமார் தன்னுடன் பேசவில்லை எனவும் செல்போனில் பேச மறுப்பதாகவும் கூறி அண்ணாமலை, நிதிஷ்குமார் வீட்டிற்கு சென்றுள்ளார்.

அங்கு நிதிஷ்குமாரின் பெற்றோர் அண்ணாமலையை எச்சரித்து அனுப்பியுள்ளனர். இந்நிலையில் வழக்கம் போல் கல்லூரி வாகனத்தில் நிதிஷ்குமார் அண்ணாமலை அருகில் அமராமல் தள்ளி சென்று அமர்ந்து வந்ததால் கோபமடைந்த அண்ணாமலை, பேண்ட் பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த கத்தியால் நிதிஷ்குமாரின் கழுத்தை அறுத்ததாக தெரியவந்துள்ளது. பொறியியல் மாணவரின் கழுத்தை, எம்.பி.ஏ. மாணவர் திடீரென அறுத்த சம்பவம் திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கத்தின் கீழ் கடனுதவி



வேலூர். நவ.28.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைப்பெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் வேலூர் மாவட்ட கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கத்தின் கீழ் சிறு தொழில் புரிய 20 மகளிருக்கு தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் ரூ. 2,00,000/- கான காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க. ஆர்த்தி, மகளிர் திட்ட இயக்குநர் யு. நாகராஜன் சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் கலியமூர்த்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சீதா, மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் லட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வங்கக்கடலில் உருவாகிறது புயல் இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

சென்னை, நவ. 28-

வங்கக் கடலில் டிசம்பர் 1ம் தேதிபுயல்உருவாகஉள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து, நவம்பர் 29ல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும்.

இன்று முதல் கடல் காற்றின் வேகம் படிப்படியாக அதிகரித்து, டிசம்பர் 1ம் தேதி மணிக்கு 90 கி.மீ. வேகத்தை எட்டும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை. இன்று முதல் 5 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கை. நவம்பர் 29ம் தேதி தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் மணிக்கு 45 முதல் 65 கி.மீ. வேகம் வரை சூறைக்காற்று வீசும் என்றும் வானிலை ஆய்வு மையம் தகவல்.

### முதல்வர் கவனத்தில் கொள்ளவும்

## அண்ணாமலை வெளியிட்ட வீடியோவால் பரபரப்பு



திருவாரூர் , நவ. 28-

திருவாரூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் மின்வெட்டு காரணமாக வெண்டிலேட்டர் இயங்காததால் பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், அது தொடர்பான வீடியோவை வெளியிட்ட பாஜக தலைவர் அண்ணாமலை பரபரப்பை கிளப்பியுள்ளார்.

திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா பகுதியைச் சேர்ந்த அமராவதி(50) என்ற பெண் நுரையீரல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இவர் இரண்டு நாட்களாக அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். நுரையீரல் பிரச்சினை என்பதாலும் மூச்சுத் திணறல் ஏற்படும் என்பதாலும் இவருக்கு வென்டிலேட்டர் மூலமாக சுவாசம் செலுத்தப்பட்டு வந்தது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் திடீரென அரை மணி நேரத்திற்கும் மேலாக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சை பிரிவில் மின்சாரம் தடைபட்டது. இதனால் அமராவதிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு வென்டிலேட்டர் இயங்காமல் அவர் மரணம் அடைந்துவிட்டார் என அவருடைய உறவினர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இந்த நிலையில், இதுத்தொடர்பான வீடியோவை தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டு பரபரப்பை கிளப்பியுள்ளார். அவர் தனது எக்ஸ் தளத்தில், ''ஊழலில் திளைக்கும் திமுக அரசின் கீழ் அரசு மருத்துவமனைகள் வீழ்ச்சியடைந்து வருவதைப் பார்க்கும்போது வேதனை அளிக்கிறது. ஊழலுக்காக கைது செய்யப்பட்ட இலாகா இல்லாத திமுக அமைச்சர், சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையை விரும்பும்போது, அரசு மருத்துவமனையில் ஐசியு போன்ற முக்கியமான பகுதியில் பவர் பேக்அப் இல்லாததால் நோயாளி ஒருவர் உயிர் இழந்துள்ளார் என்பதை முதல்வர் கவனத்தில் கொள்ள வேண்டும்'' என குறிப்பிட்டுள்ளார்.



▶ மதுரை அவனியாபுரத்தில் உள்ள தனியார் பள்ளியில் பத்மசாலியர் முன்னேற்ற சங்கத்தில் மகாசபை கூட்டம் தலைவர் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடந்த மற்றும் நடப்பு ஆண்டிற்கான வரவு, செலவு தாக்கல் செய்து அறிக்கை அங்கீகாரம் பெறுவது,நிர்வாக கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ஒப்புதல் பெறுதல் புதிய நிர்வாக கமிட்டி தேர்ந்தெடுத்தல் மற்றும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் உள்ளிட்டவை கலந்து ஆலோசிக்கப்பட்டது.இந்நிகழ்வில் பத்மசாலிய சங்கத்தின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



▶ திருவரங்குளத்தில் பிரசித்தி பெற்ற பெரியநாயகி அம்பாள் சமேத அரங்குலநாதர் கோவிலில் கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு சுவாமி அம்பாள் சுப்ரமணியர் வள்ளி தெய்வானை விஷயக்காரர் அணையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று சந்திரசேகர் சுவாமி வீதி உலா நடைபெற்றது. தொடர்ந்து கோவில் வசந்த மண்டபத்தில் சிவலிங்க வடிவில் கார்த்திகை தீப விளக்கு ஏற்றப்பட்டது. முன்னதாக கோவில் வாசலில் சொர்க்கப பனை கொளுத்தப்பட்டது. பின்னர் 150 அடி உயரராஜகோபுரத்தில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது. சுப்பிரமணிய சன்னதியில் பக்தர்கள் மாவிளக்கு வைத்து தரிசனம் செய்தனர்.

## பட்டாசு வாங்கும் காசில் மருத்துவ உதவிகள் வழங்கிய பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு



தி.மலை. நவ.28.

தீபாவளிக்கு பட்டாசு வாங்கி வெடிக்காமல் அந்த காசை சேமித்து ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கிய மாணவர்களுக்கு பாத்தியாவரம் அன்புதாஸ் பாராட்டு தெரிவித்தார்.

திருவண்ணாமலை மாவட்டம் பத்தியாவரம் புனித வளனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அதன் நிறுவனர் தாமஸ் 42வது நினைவு நாள் அப்பள்ளியில் அனுசரிக்கப்பட்டது. அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் முனைவர். அருட்சகோதரர் மதலைமுத்து தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முன்னாள் கவுன்சிலரும், காங்கிரஸ் கட்சியின் எஸ்.சி / எஸ்.டி பிரிவு மாநிலதுணைத்தலைவருமான பாத்தியாவரம் அன்புதாஸ் பள்ளியின் நிறுவனர் தாமஸ் நினைவிடத்தில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் பேசிய பாத்தியாவரம் அன்புதாஸ், பள்ளி நிறுவனர் தாமஸின் சாதனைகளை பள்ளி மாணவர்களிடையே எடுத்துக் கூறினார். இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் இந்த தீபாவளி பண்டிகைக்கு பட்டாசு வாங்கி வெடிக்காமல் அந்த காசை சேமித்து அதில் பார்வையற்ற மாணவர்களுக்கும் மனநலம் மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மருத்துவ உதவிகளை வழங்கினார்கள்.

இதற்கு பாத்தியாவரம் அன்புதாஸ் அம்மாணவர்களுக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்து பேசினார். இந்நிகழ்ச்சியில் சகோதரர்கள் ஜெயராஜ், லெவே, மூவேந்தர் உட்பட அருட்சகோதரர்கள், ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள், மாற்றுதிறனாளி மாணவர்கள், மனநலம், முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் அப்பகுதி பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள். இறுதியில் தாமஸ்-ன் நினைவிடத்தில் ஒவ்வொரு வகுப்பு வாரியாக மாணவர்களும் ஆசிரியர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

## உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பெரியபாளையத்தில் அன்னதானம்



ஊத்துக்கோட்டை, நவ28-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளரும்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பெரியபாளையம் பஸ் நிலையம் அருகே நடைபெற்றது.

இதை முன்னிட்டு கட்சி கொடியை ஏற்றி வைத்து பொது மக்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, எல்லாபுரம் வடக்கு ஒன்றிய செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான பி.ஜே.மூர்த்தி தலைமை தாங்கினார்.

மேலும், கட்சிக்கொடியை ஏற்றிவைத்துபொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுக்குழு உறுப்பினர் ஏ.வி. ராமமூர்த்தி,கலை இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் வி.பி.ரவிக்குமார்,இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சீனிவாசன், மாவட்ட கவுன்சிலர் சித்ரா முனுசாமி, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இரா.அப்புன், ஐ.ராஜா, ஆத்துப்பாக்கம் வேலு, தொண்டர் அணி துணை அமைப்பாளர் பார்த்திபன், தண்டலம் ரவி, முகமது மொய்தீன், ஆலப்பாக்கம் ஆறுமுகம் மற்றும் மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கிளைக்கழக செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள்,கழக முன்னோடிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஆரணி பேரூராட்சியில் ரூ.7.98 கோடி செலவில் குடிநீர் மேம்பாட்டு பணி மேற்கொள்ள பூமி பூஜை நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, நவ28-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளது.இந்நிலையில்,இப் பேரூராட்சியில் மத்திய-மாநில அரசு நிதி ஒதுக்கீடு அம்ருத் 2.0 திட்டத்தில் ரூ.7.98 கோடி செலவில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள உள்ளனர்.

எனவே, இப்பேரூராட்சியில் 5 ஆழ்துளை கிணறுகள்,மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள்,பைப் லைன்கள் என குடிநீர் தேவையை முழுமையாக நிறைவேற்றும் பணிகள் மேற்கொள்ள உள்ளனர். எனவே, இப்பணியை மேற்கொள்வதற்கான பூமி பூஜை நிகழ்ச்சி ஆரணி பேரூராட்சியில் உள்ள சுப்ரமணி நகரில் நடைபெற்றது.

ஆரணி பேரூராட்சிமன்ற தலைவர் ராஜேஸ்வரி இப்பணியை துவக்கி வைத்தார். திருவள்ளூர் மண்டல உதவி செயற்பொறியாளர் சரவணன், ஆரணி பேரூராட்சிமன்ற செயல் அலுவலர் பாஸ்கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில்,இளநிலை உதவியாளர் யுவராஜ்,பணி மேற்பார்வையாளர் ராஜேஷ், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் அருணா,கௌசல்யா, பிரபாவதி, சதீஷ், சுகன்யா, சுபாஷினி, முனுசாமி,சுஜாதா, கண்ணதாசன், ரஹ்மான்கான், சந்தானலட்சுமி, பொன்னரசி, குமார் மற்றும் பேரூராட்சி மன்ற ஊழியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## காட்டுமன்னார்கோயில் திமுக சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா



காட்டுமன்னார் கோவில், நவ. 28-

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் தாசில்தார் அலுவலகம் அருகில் ஒன்றிய நகர திமுக சார்பில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டம் அமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் உத்தரவின் படி கடலூர் கிழக்கு மாவட்ட பொருளாளர் எம் ஆர் கே பி கதிரவன் அறிவுறுத்தலின் படி கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் முத்துசாமி தலைமை தாங்கினார் ஒன்றிய செயலாளர் ராமலிங்கம், நகர செயலாளர் கணேசமூர்த்தி ஆகியோர் முன்னிலை வைத்தனர். காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சிவா பொதுமக்களுக்கு இனிப்புகள் மரக்கன்றுகள் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைக்கு தங்க மோதிரம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் அவைத் தலைவர் கருணாநிதி ,முட்டம் ஜெயபாண்டியன், ஜி. வி. எஸ் கல்யாணசுந்தரம், பூக்கடை செந்தில் ,பழஞ்சநல்லூர் பாஸ்கர் ,பாலமணிகண்டன், நிஜார் அகமது, மணிமாறன், சுப்பிரமணியன், தாமோதரக் கண்ணன் ,ஏ பி ஆர் அருண், தாஸ், மகளிர் அணி நிர்வாகிகள் உள்பட, பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், மாவட்ட குடும்பநல அமைப்பின் சார்பில், நவீன வாசக்டமி இருவார விழா விழிப்புணர்வு ரதத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று துவக்கிவைத்தார். உடன் இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.ஸ்ரீபிரியா தேன்மொழி, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி),கோமதி (மருத்துவம் மற்றும் குடும்பநலம்), மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# செங்கோட்டை நகர திமுக சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்



தென்காசி,நவ.28–

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் புதல்வரும், தமிழ் நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு,தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெயபாலன் அறிவுறுத்துதலின் படி, செங்கோட்டை நகர திமுக சார்பில், பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் வெகு விமரிசையாக பிறந்தநாள் விழாவினை செங்கோட்டை நகர கழக செயலாளர் வழக்கறிஞர் ஆ..வெங்கடேசன் தலைமையில், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளான, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஆ.சண்முகராஜா, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவைத் தலைவர் மு.ஆபத்துக்கத்தான் மாவட்ட மகளிர் அணி தலைவர் பேபிரஜப் பாத்திமா, மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் மாரியப்பன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் மு. நசீர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் செ.லிங்கராஜ், தொமுச மத்திய சங்க மண்டல துணைச் செயலாளர் உ.ரவீந்திரன் ஆகியோர் முன்னிலையில் கொண்டாடப்பட்டது.

நகர அவைத் தலைவர் காளி வரவேற்புரை ஆற்றினார், நிகழ்வில் நகர துணைச் செயலாளர்கள் ஜோதிமணி, முத்து சரோஜா, ராஜா மாவட்ட பிரதிநிதிகள் பாஞ்ச்பீர் முகம்மது, மணிகண்டன், சுப்பிரமணியன் வட்டக் கழக செயலாளர்கள் பாலு, மாரியப்பன், ஈஸ்வரமூர்த்தி, இப்ராகிம், சேட் (எ) சேக்மதார், வேலுமணி, கருப்பசாமி, குட்டிராஜா, கோவிந்தராஜ், விஜி, டைமண்ட் சலீம், செங்கை குற்றாலிங்கம், அனுராகம் மாரியப்பன், பழனிச்சாமி, பொறியாளர் அணி அந்தோணி, ஆர்.பி.எப். மணி, லிங்கராஜ், சின்ன மாரியப்பன், மாது, ஷர்மிநாகூர்கனி, கொக்கரக்கோ கோவிந்தன், அப்பி முருகன், ஆட்டோ மாரி, காந்திபாபு, ஐஸ் வேல்சாமி, முத்துசாமி, நீராத்திலிங்கம், வேலுச்சாமி, இளைஞர் அணி காஜா முகமது, டிரைவர் வேலுச்சாமி, செல்வராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்ட உதயநிதி நற்பணி மன்ற துணைத் தலைவர் மனோஜ் நன்றி கூறினார்.



கலைஞர் நூற்றாண்டு "முத்தமிழ்த்தேர்" - அலங்கார ஊர்தி நேற்று (27.11.2023) சேலம் மாவட்டத்திற்கு வருகை புரிந்ததையொட்டி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சித் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா ஆகியோர் "முத்தமிழ்த்தேர்" - அலங்கார ஊர்தியினை வரவேற்று, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பேனாக்கள் மற்றும் மரக்கன்றுகளை வழங்கினார்கள்.

# ஒடிசாவைக் கலக்கப்போகும் தமிழர் : நவீன் பட்நாயக் தலைமையில் பிஜூ ஜனதா தளத்தில் இணைந்தார்



ஒடிசா : நவ. 28, ஒடிசாவில் சக்திவாய்ந்த அதிகாரியாக கருதப்படும் தமிழரான வி.கார்த்திகேய பாண்டியன் விருப்ப ஓய்வு பெற்றதை தொடர்ந்து, முதல்வர் நவீன் பட்நாயக் முன்னிலையில் பிஜூ ஜனதா தளம் கட்சியில் இன்று இணைந்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள மதுரையை சேர்ந்தவர் வி.கார்த்திகேய பாண்டியன். கடந்த 2000-ம் ஆண்டு குடிமைப்பணி தேர்வில் ஐஏஎஸ் ஆனார். இவருக்கு ஒடிசா மாநிலப் பிரிவின் பணி கிடைத்தது. ஒடிசாவின் காலஹண்டி மாவட்டம், தர்மகர் சார் ஆட்சியராக இவர் தனது பணியைத்தொடங்கினார். கடந்த 2005-ல் மயூர்பஞ்ச் மாவட்ட ஆட்சியராக அமர்த்தப்பட்டார். பிறகு 2007-ல் கஞ்சாம் மாவட்ட ஆட்சியராக மாற்றலானார். இந்த காலக்கட்டங்களில் அவர் பொதுமக்களுக்கு செய்த நற்பணிகள், ஒடிசா வாசிகள் இடையே பரவலாகப் பேசப்பட்டது. இதற்கு அவர் சரளமாக ஒடியா மொழி பேசி மக்களுடன் ஒன்றிப்பழகியதும் காரணமானது.

இதனால் 2011-ல் ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் தனது அலுவலகத்தில் தனிச் செயலாளராக பாண்டியனை பணி அமர்த்தினார். அப்போது முதல் அப்பதவியில் தொடர்ந்த அவர், முதல்வருக்கு மிகவும் நெருக்கமானார். ஒடிசாவின் நிழல் முதல்வர் என்று பேசும் அளவுக்கு இந்த நெருக்கம் இருந்தது. ஒடிசாவின் அனைத்து துறைகளிலும் பாண்டியனின் நேரடித் தலையீடு இருந்ததாக கூறப்பட்டது. குறிப்பாக, ஒடிசா மக்களின் மாற்றத்துக்கான முக்கியத் திட்டமான '5டி' திட்டத்தின் பின்னணியில் அதிகாரி வி.கே.பாண்டியன் இருந்தார். அவர் தனது பணிக்காலத்தில் குடியரசுத் தலைவரின் தேசிய விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். என்றாலும் இவருக்கு எதிராக விமர்சனங்களும் எழுந்தன.

முதல்வரின் கட்சியான பிஜூ ஜனதா தளத்தின் நிர்வாகத்திலும் இவர் தலையிடுவதாக கட்சியினர் புகார் கூறத் தொடங்கினர். இதைக் குறிப்பிட்டு முக்கிய நிர்வாகிகள் சிலரும் கட்சியிலிருந்து விலகினர். இந்த நிலையில் முதல்வர் நவீன் பட்நாயக் முன்னிலையில் பிஜூ ஜனதா தளத்தில் பாண்டியன் நேற்று தன்னை இணைத்துக் கொண்டார். மத்தியில் பல வருடங்களாக எந்தக் கூட்டணியிலும் சேராமல் தனியாகச் செயல்படும் கட்சியாக பிஜூ ஜனதா தளம் உள்ளது. மாநிலத்தில் பாஜக எதிர்க்கட்சியாக இருப்பினும், மத்தியில் பிரச்சினை அடிப்படையில் ஆதரவு அளித்து வருகிறது. இருப்பினும் பிஜூ ஜனதா தளத்திற்கு தேசிய அரசியலில் ஒரு உறுதியான தலைவர் இல்லை எனக் கருதப்படுகிறது. இந்த தலைவருக்குரிய பாத்திரத்தை ஏற்பதுடன் கட்சியை தேசிய அளவில் உயர்த்த அதிகாரி வி.கே.பாண்டியன் முயற்சிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தாலுகா மேலப்பட்டு ஊராட்சியில் மரம் வளர்போம் மழை பெறுவோம் வனவிலங்குகளைக் காப்போம் என்ற திட்டத்தின் கீழ் மேலப்பட்டு ஊராட்சியில் உள்ள கண்மாய்கள் மரக்கன்றுகள் வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, இதில் பழமரங்கள் நடும் விழாவினை ஊராட்சிமன்றத் தலைவர் அயூப்கான் தலைமையில் அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் முன்னிலையில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது, இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், குமாரவேலன் மற்றும் மாவட்ட கவுன்சிலர் சரிதா மேகராஜன் மற்றும் ஆத்மா குமார் மற்றும் துணைத் தலைவர், மற்றும் வார்டு, உறுப்பினர்கள், கிராமத் தலைவர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்..



திமுக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ சென்னையில் அவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.



தென்காசிவடக்கு மாவட்டம் புளியங்குடியில் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சேதுபதி, புளியங்குடி நகரத் தேர்தல் பொறுப்பாளர் பரமகுரு தலைமையில், நகர செயலாளர்எ. அந்தோணிசாமி முன்னிலையில் திமுக நகர கழக அலுவலகத்தில் இளைஞர் அணி செயலாளர், இளைஞர் மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 47- வது பிறந்தநாள் விழாவில் கேக் வெட்டி பிறந்தநாள் நிகழ்ச்சியை கொண்டாடினர். மேலும் புளியங்குடி பாக முகவர்கள் பி எல் ஏ 2, பி எல் சி முகவர்கள் கலந்தாய்வுக் கூட்டமும் நடைபெற்றது, இதில்அவைத் தலைவர் வேலுச்சாமி பாண்டியன், பிச்சையா வழக்கறிஞர் அணி அமைப்பாளர், பொண்ணுதுரைச்சி மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர், மீனாட்சி சுந்தரம் கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர், பீர் ஒலி மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர், ரமேஷ் நெசவாளர் அணி துணை அமைப்பாளர், ராஜராஜன் சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர், உமா மகேஸ்வரி மாவட்ட மகளிர் அணி தலைவி ,நாகூர் கனி மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர், விஜயா சௌந்தர பாண்டியன் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர், கவிதா மாவட்ட மகளிர் அணி வலைதள பொறுப்பாளர், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், இளைஞர் அணி சதீஷ், முருகேஷ், பொருளாளர் காஜா மைதீன், சிறுபான்மையினர் அணி ஷேக் மைதீன், பொதுக்குழு உறுப்பினர் பத்ர சாகுல், பெருமாள் மாரிச்செல்வம், அருணாச்சலம், ஆனந்தராஜ், மணிமாறன், காந்திமதி, தங்கம், முருகையா, ஜோதி பாண்டியன், வெற்றிவேல் ஆகியோர் பிறந்த நாள் நிகழ்ச்சியிலும், கலந்தாய்வு கூட்டத்திலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திமுக இளைஞரணி செயலாளரும் விளையாட்டு மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 47 வது பிறந்தநாள் விழாவில் தென்காசி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.எம்.எஸ். முகேஷ் நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் செள.சங்கீதா நேற்று பெற்றுக்கொண்டார்.

# அறந்தாங்கியில் பிரசித்திபெற்ற கிறிஸ்து அரசர் ஆலய தேர்பவனி திருவிழா



அறந்தாங்கி ,நவ.28–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் பிரசித்தி பெற்ற கிறிஸ்துஅரசர் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் கிறிஸ்துஅரசரின் திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 17-ந்தேதி கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் மாலை 6 மணிக்கு ஜெபமாலை, திருப்பலி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தது. விழாவில் மிக்கேல் சமணசு,கிறிஸ்து அரசர் மற்றும் ஆரோக்கிய மாதாவிற்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தொடர்ந்து 3 தேர்களுக்கும் தேர்புனிதம் செய்யப்பட்டது.

வாணவேடிக்கைகளுடன் தேர்பவனியானது ஆலயத்திலிருந்து தொடங்கி தேர்பவனி அறந்தாங்கி பெரியகடைவீதி பள்ளிவாசல் தெரு உள்ளிட்ட முக்கிய வீதிகளின் வழியாக சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. இதில் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து பெண்கள் உட்பட ஏராளமான கிறிஸ்தவர்கள் மற்றும் இந்து முஸ்லீம் மதத்தினரும் கலந்துகொண்டு வழிபட்டனர்.

# பாரதியார் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் அமலா அன்னை பள்ளி மாணவர்கள் தங்கப்பதக்கம் வென்று சாதனை



பொன்னமராவதி,நவ.28–

பள்ளி கல்வித்துறை நடத்திய பாரதியார் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட அளவில் நடைபெற்றது. இதில் அமலா அன்னை பள்ளி மாணவி17 வயதிற்கு உட்பட்ட மாணவியருக்கான சுண்டாட்டம் கேரம் போர்டு போட்டியில் பொன்னமராவதி அமல அன்னை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் பத்தாம் வகுப்பு மாணவி பா.ச.பவதாரணி ஒற்றையர் பிரிவில் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

மேலும் 17 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான இரட்டைகள் பிரிவில் பொன்னமராவதி அமல அன்னை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் பத்தாம் வகுப்பு மாணவர்கள் வீ.மனோஜ் ரா.விஜயராம் மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தைப் பிடித்தனர், இதனை அடுத்து வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளியின் முதல்வர் ச.ம.மரியபுஷ்பம் மற்றும் துணை முதல்வர் இரா பிரின்ஸ் (எ) இளவரசன் மாணவர்களை வாழ்த்தி பாராட்டினார்கள். சுண்டாட்டப் போட்டியில் மாணவர்கள் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்த, உடற்கல்வி ஆசிரியர் அழகப்பன், மற்றும் இரா. பார்த்திபன், பி.ஆரோக்கிய தாஸ், மற்றும் தங்கப்பதக்கம் வென்ற மாணவர்களையும் அப்பகுதி பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர்.



புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், முள்ளூர் ஊராட்சி, தென்னதிரையன்குளத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், சீமைக்கருவேல் மரங்கள் அகற்றுதல் மற்றும் பழமரக்கன்றுகள் நடும் பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று துவக்கி வைத்தார். உடன் வேளாண் இணை இயக்குநர் பெரியசாமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) இளங்கோ தாயுமானவன், ஊராட்சிமன்றத் தலைவர் ஆதீஸ்வரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# 'நடப்போம் நலம் பெறுவோம்' – விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் வாக்கிங் செல்லும் மாடுகள்



விழுப்புரம் : நவ. 28, விழுப்புரம் நகரில் மாடுகளால் வாகன ஓட்டிகள் திணறி வருகின்றனர். ஆட்சியர் அலுவலக வளாகத்தையும் விட்டு வைக்காமல் மாடுகள் வலம் வருகின்றன.

விழுப்புரம் நகரில் உள்ள பிரதான சாலைகள், குடியிருப்பு சாலைகள் என எல்லா இடங்களில் மாடுகள் கூட்டம் கூட்டமாக சாலையின் நடுவே படுத்து கிடப்பதும், சாலையை கடப்பதும் என பொதுமக்களுக்கு தொடர் தொல்லைகள் கொடுத்து வருகின்றன. இதுதொடர்பாக அண்மையில் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலானது. அந்த வீடியோவில் ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் கடந்த நவ. 4-ம் தேதி தொடங்கப்பட்ட 'நடப்போம் நலம் பெறுவோம்' என்ற சிறப்பு திட்டத்தை மாடுகளும் செயல்படுத்தி வாக்கிங் செல்லும் வகையில் வரிசையாக நடந்து செல்கின்றன என கிண்டல் செய்து சமூக வலைதளங்களில் வைரலானது.

இந்நிலையில் விழுப்புரம் நகராட்சி நிர்வாகம் சாலைகளில் சுற்றும் மாடுகளை பிடித்து பட்டியில் அடைக்கப்பட்டு, மாடுகளின் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்படும் என்று அறிவித்தது. நகராட்சி நிர்வாகத்தால் கடந்தாண்டு பிடிக்கப்பட்ட மாடுகள் அந்தசமயத்தில் பட்டியில் அடைக்கப்பட்டன. ஆனால் மாட்டின் உரிமையாளர் சரியான நேரத்துக்கு வந்து பாலை மட்டும் கறந்து கொண்டு, அபராதம் கட்ட வசதியில்லை. நீங்களே பராமரித்துவாருங்கள் என கூறிவிட்டு செல்ல தொடங்கினர். இதனால் நகராட்சி ஊழியர்களுக்கு பிடிக்கப்படும் மாடுகளை பராமரிப்பது கூடுதல் பணியாகவும் இருந்தது.

மேலும் பிடிக்கப்படும் மாடுகள் ஏலம் விடப்படும் என்று மாவட்ட ஆட்சியர் கடந்தாண்டு அறிவித்திருந்தார். ஆனால் இந்த மாடுகளை ஏலம் எடுக்க யாரும் முன்வராததால் அந்த அறிவிப்பை மாவட்ட நிர்வாகத்தால் செயல்படுத்த முடியவில்லை. ஆனால் தற்போதும் விழுப்புரம் நகரில் முக்கியமான சாலைகள், வீதிகளில் மாடுகளால் வாகன ஓட்டிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. நடந்து செல்லும் பெண்கள், முதியவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதுகுறித்து விழுப்புரம் நகராட்சி அலுவலர்களிடம் கேட்டபோது, "மாட்டின் உரிமையாளர்கள் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினருக்கு தெரிந்தவராக உள்ளார். பிடிபட்ட மாட்டை விடுவிக்க சொல்லி நகர்மன்ற உறுப்பினர்கள் எங்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

அப்படியே பிடிபட்ட மாட்டை ஏலம் விடும் நாள் அறிவிக்கப்பட்டாலும் யாரும் ஏலம் எடுக்க முன்வருவதில்லை. இதனால் கடந்த ஆண்டு பிடிக்கப்பட்டு பட்டியில் அடைக்கப்பட்ட மாட்டை வெளியே விட்டு விட்டோம். இப்போது அந்த மாடுகள் சுதந்திரமாக சுற்றிவருகின்றன"என்றனர். கடந்த ஆகஸ்ட் 10-ம் தேதி சென்னையில் பள்ளிக்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுமி ஆயிஷாவை மாடு முட்டித் தள்ளிய வீடியோ காட்சி தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதே போல கடந்த மாதம் 19-ம் தேதி சென்னை திருவல்லிக்கேணியில்மாடுமுட்டி தள்ளியதால் படுகாயமடைந்த முதியவர் ஓமந்தூரார் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். விழுப்புரம் நகர சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்த நகராட்சி நிர்வாகம் மாட்டின் உரிமையாளர்கள் அனைவரையும் அழைத்து கலந்தாய்வு கூட்டம் நடத்தி சுமுக முடிவெடுக்க வேண்டும். நகராட்சி நிர்வாகம் மாட்டின் உரிமையாளர்கள் அனைவரையும் அழைத்து கலந்தாய்வு கூட்டம் நடத்தி சுமுகமுடிவெடுக்கவேண்டியது அவசியமும், அவசரமும் கூட.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ‘கிரிக்கெட் பேட் வாங்கக்கூட காசு இல்ல ரெய்னாதான் வாங்கிக்கொடுத்தார்’– இளம் வீரர் ரிங்கு சிங் நெகிழ்ச்சி



**விளையாட்டு செய்தி : நவ. 28,**

**இந்திய அணியில் வருங்கால நட்சத்திரமாக உருவாகி வரும் ரிங்கு சிங் ஐபிஎல் தொடரில் வாய்ப்பு பெறும் முன் சரியான கிரிக்கெட் பேட் மற்றும் காலில் மாட்டும் பேடு ஆகியவை வாங்க பணம் இல்லாமல் தவித்து இருக்கிறார். அவரது நிலையைபார்த்துமுன்னாள் வீரர் அவருக்கு உதவியதாக ரிங்கு தெரிவித்துள்ளார்.**

அப்போது ரிங்கின் ஊருக்கு சென்றிருந்த சுரேஷ் ரெய்னா அவரது நிலையை பார்த்து அவருக்கு உதவி இருக்கிறார். அப்போது ரிங்கு சிங் பற்றி அதிகம் தெரியாத போதும் அவரின் அதிரடி ஆட்டம் மற்றும் கிரிக்கெட் மீதான ஈடுபாட்டை மட்டும் பார்த்து அவருக்கு உதவியுள்ளார்.

சுரேஷ் ரெய்னா அப்போது அவரிடம் எந்த கேள்வியுமே கேட்கவில்லை என்பதை ரிங்கு சிங்கே தற்போது ஒரு பேட்டியில் கூறி இருக்கிறார். சுரேஷ் ரெய்னா போலவே ரிங்கு சிங்கும் இடது கை ஆட்டக்காரர் தான். அதனாலேயே, ரிங்கு சிங்கிற்கு சுரேஷ் ரெய்னா மீது கிரிக்கெட் ரசிகராக ஈடுபாடு ஏற்பட்டு இருக்கிறது.

இதுகுறித்து பேசிய ரிங்கு சிங், ‘‘நான் சுரேஷ் ரெய்னாவின் தீவிர ரசிகன். நான் அவரைப் பின்தொடர்ந்து அவரை அப்படியே காப்பி அடிக்க முயற்சிக்கிறேன். எனது வாழ்க்கையிலும், கேரியரிலும் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். கிரிக்கெட் விளையாட பேட், பேட்கள் மற்றும் எனக்கு தேவையான அனைத்தையும் அவர் வாங்கிக் கொடுத்து உதவினார். எதுவும் கேட்காமலும் சொல்லாமலும் ஏறக்குறைய அனைத்தையும் வாங்கி அனுப்பியிருக்கிறார்” என நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

# டேவிஸ் கோப்பை டென்னிஸ்

## இத்தாலி அணி சாம்பியன்




**மலாகா : நவ. 28,**

**இத்தாலி அணி கோப்பையை வெல்வதில் ஜானிக் சின்னர் முக்கிய பங்கு வகித்தார்.**

கிரிக்கெட்டில் உலகக்கோப்பையைப் போன்று டென்னிஸில் டேவிஸ் கோப்பை போட்டி தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முறை ஸ்பெயினில் இந்த தொடர் நடைபெற்றது. இந்த தொடரின் இறுதிப்போட்டிக்கு ஆஸ்திரேலியா மற்றும் இத்தாலி அணிகள் முன்னேறின. இதில் 2-0 என்ற கணக்கில் இத்தாலி அணி வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது.

இறுதிப்போட்டியில் இத்தாலி வீரரான ஜானிக் சின்னர், ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாரை 6-3 6-0 என்ற கணக்கில் வீழ்த்தியதன் மூலம் கோப்பையை வெல்வதில் முக்கிய பங்கு வகித்தார். 1976ஆம் ஆண்டுக்கு பிறகு இத்தாலி அணி டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 2019–ல் தோனியை ரன்அவுட் செய்ததற்காக தற்போதும் என்னைத் திட்டி மெயில்கள் வருகிறது – மார்ட்டின் கப்டில்



**நியூசிலாந்து : நவ. 28,**

**2019 உலகக்கோப்பை அரையிறுதி ஆட்டத்தின் முக்கிய கட்டத்தில் தோனியை கப்டில் ரன் அவுட் ஆக்கியிருப்பார்.**

2019 உலகக்கோப்பையின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா- நியூசிலாந்து அணிகள் மோதின. இந்த போட்டியில் இந்திய அணியின் தோல்விக்கு கடைசி கட்டத்தில் தோனி ரன் அவுட் ஆனது ஒரு காரணமாக சொல்லப்படுகிறது. தோனியை மார்ட்டின் கப்டில் ரன் அவுட் ஆக்கியிருப்பார். இந்த நிலையில், தோனியின் ரன் அவுட் குறித்து தற்போது மார்ட்டின் கப்டில் பேசியதாவது;

“தோனி அடித்த பந்து மேலே செல்வதைப் பார்த்தது மட்டுமே எனக்கு நினைவிருக்கிறது. அப்போது அந்த பந்து என்னை நோக்கி ஒருவிதமாக வந்தது. பந்தை பிடிப்பதற்கு வேகமாக ஓடினேன். அப்போது பந்தை ஸ்டம்ப்களில் எறிவதற்கான வாய்ப்பு இல்லை என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் ஒன்றரை ஸ்டம்புகள் மட்டுமே என் பார்வைக்கு தெரிந்தன. இருப்பினும் நான் ஸ்டம்பை நோக்கி அடிக்க முயற்சித்தேன். எனக்கு அதிர்ஷ்டம் கிடைத்தது. அந்த கணத்தில் துல்லியமாக பந்து ஸ்டம்பை அடித்தது. இதனால், நூலிழையில் தோனி ரன் அவுட் ஆனார்.

மேலும் அதை பற்றி கூறவேண்டுமானால், அந்த ரன் அவுட் நடந்ததற்கு பிறகு மொத்த இந்தியாவிற்கும் என்னை பிடிக்கவில்லை. இந்திய ரசிகர்களிடம் இருந்து தற்போது வரையிலும் எனக்கு ஏராளமான வெறுப்பூட்டும் மின்னஞ்சல்கள் வருகின்றன” என்று கப்தில் கூறினார்.

# கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 : நவ.30 முதல் தமிழக அணிக்கான தேர்வுகள்




**சென்னை : நவ. 28.**

**கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளுக்கான தமிழக அணியில் இடம் பெறுவதற்கான தேர்வு வரும் நவ.30-ம் தேதி முதல் சென்னையில் நடைபெறவுள்ளது.**

இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் உடற்தகுதியை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் சார்பில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் 2023-ம் ஆண்டுக்கான கேலோ போட்டியை தமிழகத்தில் நடத்துவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்தில் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 2024 ஜன.19 முதல் ஜன.31 வரை நடைபெறும் கேலோ போட்டிகளில் 5 ஆயிரத்தும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். இதையொட்டி போட்டிகளில் தமிழக அணிகள் சார்பில் இடம்பெறுவதற்கான தேர்வுகள் சென்னையில் நவ. 30, டிச.1, 2 ஆகிய தேதிகளில் நடத்தப்படுகிறது. ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில், பெண்களுக்கான கூடைப்பந்து அணிக்கு டிச.1-ம் தேதியும், ஆண்கள் அணிக்கு டிச.2-ம் தேதியும், பெண்கள் கால்பந்து அணிக்கு நவ.30-ம் தேதியும், ஆண்கள் அணிக்கு டிச.1-ம் தேதியும் காலை 7 மணி அளவில் வீரர்கள் தேர்வு நடத்தப்படுகின்றன.

அதேபோல நேரு பூங்கா, மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பெண்களுக்கான கபடி மற்றும் கோ-கோ அணிக்கு நவ.30-ம் தேதியும், ஆண்கள் அணிக்கு டிச.1-ம் தேதியும், மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கில் பெண்களுக்கான வாலிபால் மற்றும் ஹாக்கி அணிக்கு நவ.30-ம் தேதியும், ஆண்கள் அணிக்கு டிச.1-ம் தேதியும் காலை 7 மணிக்கு வீரர்கள் தேர்வு நடத்தப்படுகின்றன. இதில் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் தகுந்த பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

வரலாறு சினிமா

# “ஒரு குழந்தையைப் போல அழுதேன்” ‘காதல் தி கோர்’ படத்துக்கு ஐஸ்வர்யா லக்ஷ்மி பாராட்டு



**சென்னை : நவ. 28,**

**“ஒரு குழந்தையைப் போல திரையரங்கில் அழுதேன்” என மம்மூட்டி - ஜோதிகாவின் ‘காதல் தி கோர்’ படத்தை நடிகை ஐஸ்வர்யா லக்ஷ்மி பாராட்டியுள்ளார். மேலும், நடிகை சமந்தாவும் படத்தை புகழ்ந்துள்ளார்.**

இது தொடர்பாக நடிகை ஐஸ்வர்யா லக்ஷ்மி தனது எக்ஸ் தள பக்கத்தில், “மம்மூட்டி என்னைத் தொடர்ந்து ஆச்சரியப்படுத்திக் கொண்டிருக்கிறார். வலி, தனிமை, பயம், அவர் எடுக்க வேண்டிய முடிவுகளின் கணம் என படத்தின் ஒவ்வொரு பார்வையும் என்னை பாதித்தது. இரண்டாம் பாதியில் வரும் ‘எண்டே தெய்வமே’ காட்சி படத்தின் சிறப்பான பகுதியாக இருந்தது. திரையரங்கில் ஒரு குழந்தையைப் போல அழுதேன். ஜியோ பேபி உங்களின் ஒவ்வொரு கதாபாத்திரங்களும் எங்களை திரும்பி பார்க்க வைக்கிறது. ஓமணா கதாபாத்திரத்தின் மூலம் நீண்ட நாட்களுக்கு எங்கள் இதயங்களில் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள் ஜோதிகா. இப்படியான ஒரு படத்தைக் கொடுத்த படக்குழுவுக்கு வாழ்த்துகள்” என தெரிவித்துள்ளார்.

நடிகை சமந்தா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், “இந்த ஆண்டின் சிறப்பான, அழகான அடர்த்தியான படம். மம்மூட்டி, நீங்கள் தான் என்னுடைய ஹீரோ. இதிலிருந்து என்னால் மீள முடியவில்லை. ஜோதிகா லவ் யூ. ஜியோ பேபி நீங்கள் ஒரு லெஜண்ட்” என பதிவிட்டுள்ளார்.

# “நான் சிலரை மனிதர்களாக மதிப்பதில்லை... காரணம்...” சீனு ராமசாமி விவகாரத்தில் மனிஷா யாதவ் விளக்கம்



**சென்னை : நவ. 28,**

**‘இடம் பொருள் ஏவல்’ படப்பிடிப்பின்போது இயக்குநர் சீனு ராமசாமி உடனான பிரச்சினை தொடர்பாக தற்போது எழுந்துள்ள சர்ச்சை குறித்து நடிகை மனிஷா யாதவ் விளக்கம் அளித்துள்ளார்.**

கடந்த சில தினங்களுக்கு முன்பு இயக்குநர் சீனு ராமசாமி - நடிகை மனிஷா யாதவ் இடையிலான பிரச்சினை குறித்து சமூக வலைதளங்களில் விவாதங்கள் அனல் பறந்தன. ’இடம் பொருள் ஏவல்’ படத்தின் போது மனிஷா யாதவை இயக்குநர் சீனு ராமசாமி துன்புறுத்தியதாக கூறப்பட்டது. இதுகுறித்து சீனு ராமசாமி தனது எக்ஸ் பக்கத்தில் விளக்கம் அளித்திருந்த நிலையில், தற்போது நடிகை மனிஷா யாதவ் இதுகுறித்து பேசியுள்ளார்.

பேட்டி ஒன்றில் மனிஷா யாதவ் கூறும்போது, “கடந்த வாரம் சீனு ராமசாமியின் ஆபீசில் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ஒரு புதிய படத்தில் ஒரு முக்கியமான கதாபாத்திரம் இருப்பதாக சொல்லப்பட்டது. எனக்கு அது மிகவும் விநோதமாக இருந்தது. இத்தனை ஆண்டுகளாக இருவரும் தொடர்பில் இல்லாத நிலையில், ஏன் அவர் எனக்கு போன் செய்ய வேண்டும் என்று எனக்கு தோன்றியது. ’இடம் பொருள் ஏவல்’ படப்பிடிப்பின்போது அவர் என்னை நடத்திய விதத்தின் அடிப்படையிலும், அவர் என்னை அப்படத்தில் இருந்து நீக்கியதாலும் இனி அவருடைய படத்தில் நடிக்க விரும்பவில்லை. இது எல்லாவற்றுக்கும் காரணம் நான் அவரிடம் நல்லவிதமாக நடந்து கொள்ளவில்லை என்பதும், அவர் செய்த எல்லாவற்றுக்கும் ஒத்துழைக்கவில்லை என்பதும்தான்.

அப்படத்திலிருந்து நீக்கப்பட்ட பிறகு, உடனடியாக எனக்கு பதில் வேறொரு நடிகை அதில் நடிக்கவைக்கப்பட்டார். அனைத்தும் திடீரென நடந்தது. நான் அந்தக் கதாபாத்திரத்துக்கு பொருத்தமானவர் இல்லை என்று ஓர் இயக்குநர் நினைத்து என்னை நீக்கினால் அதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

ஆனால், ஒருவர் எனக்கு எல்லா விதமான குப்பைகளை மெசேஜ் செய்வதை நான் அனுமதிக்கவில்லை. அது என்னை அப்செட் செய்ததால் அது குறித்து நான் யாரிடமும் பேசகூட விரும்பவில்லை. எனக்கு நடிப்பு வரவில்லை என்று அவர் துறையில் இருக்கும் அனைவரிடமும் கூறிவிட்டார் என்று நினைக்கிறேன்.

’ஒரு குப்பை கதை’ பட விழா மேடையில் நான் அனைவருக்குமே நன்றி சொன்னதால் அவருக்கும் சேர்த்து நன்றி சொன்னேன். மேடையில் இருக்கும் ஒருவரை விட்டுவிட்டு அடுத்தவருக்கு நன்றி சொல்வது தொழில் தர்மம் அல்ல. நல்ல மனம் கொண்ட பெரிய இயக்குநர்களிடம் நான் பணியாற்றியிருக்கிறேன். திறமையானவர்களாக இருந்தும் தார்மிக உணர்வு இல்லாதவர்களை நான் மனிதர்களாகவே மதிப்பதில்லை. எனது கணவர், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் இந்தத் துறையில் இருக்கும் எனது நலம்விரும்பிகள் ஆகியோரது ஆதரவு எனக்கு இருப்பதால் நான் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். எந்த ஒரு பெண்ணும், இதுபோன்ற சூழலை மீண்டும் எதிர்கொள்ளமாட்டார் என்று நான் நம்புகிறேன்” என்று மனிஷா யாதவ் கூறியுள்ளார்.

# தயாரிப்பு நிறுவனம் தொடங்கினார் இயக்குநர் லோகேஷ் கனகராஜ்



**சென்னை : நவ. 28,**

**இயக்குநர் லோகேஷ் கனகராஜ் ‘ஜி ஸ்குவாட்’ என்ற தனது புதிய தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், “5 படங்களை இயக்கிய பின் தற்போது என்னுடைய தயாரிப்பு நிறுவனமான ‘ஜி ஸ்குவாட்’-ஐ அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். கதைசொல்லலின் புதிய முறைக்காகவும், பொழுதுபோக்குக்காகவும் இதனை அர்ப்பணித்திருக்கிறேன்.

எனக்கு நெருக்கமான நண்பர்கள் மற்றும் உதவி இயக்குநர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் என்னுடைய முதல் சில தயாரிப்புகள் அமையும். இதுவரை எனக்கு நீங்கள் எப்படி ஆதரவளித்தீர்களோ அதேபோல, இந்தப் படைப்புகளுக்கும் ஆதரவளிக்க வேண்டும் என விரும்பி கேட்டுக்கொள்கிறேன். எனது முதல் தயாரிப்பின் அப்டேட்டுக்காக காத்திருங்கள்” என தெரிவித்துள்ளார். விஜய் நடிப்பில் வெளியான ‘லியோ’ படத்துக்குப்பிறகு, அடுத்ததாக ரஜினியின் ‘ரஜினி171’ படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

# நயன்தாரா படத்தில் மத பிரச்னையா? இயக்குனர் விளக்கம்



**சென்னை : நவ. 28,**

**நயன்தாரா நடித்துள்ள படம், ‘அன்னபூரணி’. நாயகியை மையமாகக் கொண்ட இப்படத்தில் சத்யராஜ், ஜெய், கே.எஸ். ரவிகுமார், ரெடின் கிங்ஸ்லி, அச்யுத் குமார், குமாரி சஞ்சு, ரேணுகா, கார்த்திக் குமார், சுரேஷ் சக்ரவர்த்தி நடித்துள்ளனர்.**

சத்யன் சூரியன் ஒளிப்பதிவு செய்ய, தமன் இசை அமைத்துள்ளார். ஷங்கர் உதவியாளர் நிலேஷ் கிருஷ்ணா இயக்கியுள்ளார். வரும் டிசம்பர் 1ம் தேதி திரைக்கு வரும் இப்படம் குறித்து நிலேஷ் கிருஷ்ணா கூறியதாவது:ரங்கத்தில்பிறந்து வளர்ந்த ஒரு பிராமணப்பெண், சமையல் கலையில் சாதிக்கத் துடிக்கிறாள். அப்படி சமையல் கலைஞரானால்

அசைவம் சமைக்க வேண்டும் என்பதால், அவளது ஆசைக்கு குடும்பம் தடை விதிக்கிறது. ஆனால், அதையும் மீறி அவள் எப்படி சாதிக்கிறாள் என்பதுகதை. தந்தை, மகளுக்கு இடையிலான பாசத்துக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மகளாக நயன்தாரா, தந்தையாக அச்யுத் குமார் நடித்துள்ளனர். இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்த இளைஞராகவும், நயன்தாராவின் நண்பராகவும் ஜெய் நடித்துள்ளார். அவருடைய தந்தையாக சத்யராஜ் நடித்துள்ளார். இக்கதையை கடந்த ஆண்டே நயன்தாராவிடம் சொன்னேன். அவரும், ‘தொடர்ந்து ஆக்‌ஷன் திரில்லர் படங்களில் நடிக்கிறேன். இப்படம் அதற்கு மாறாக இருக்கிறது. அதனால், கண்டிப்பாக உங்களது படத்தில் நடிக்கிறேன்.

என் கைவசம் இருக்கும் படங்களை முடித்து தரும் வரை உங்களால் காத்திருக்க முடியுமா?’ என்று கேட்டார். அவருக்காக ஒரு வருடம் காத்திருந்து படமாக்கினேன். படத்தில் சாதி, மதம் குறித்து எதுவும் பேசவில்லை. மனித நேயம், அன்பு மற்றும் சாதிக்கத் துடிக்கும் ஒரு பெண் சந்திக்கும் பிரச்னை குறித்து பேசியிருக்கிறேன். முன்னோட்டத்தைப் பார்த்துவிட்டு, சில காட்சிகள் குறிப்பிட்ட பிரிவினரை புண்படுத்துவதாக இருக்கிறது என்றனர். முழு படமாகப் பார்க்கும்போது, அக்காட்சிஎந்த உள்நோக்கமும் இல்லாதது என்றும், கதையுடன் இணைந்து வருவது என்றும் புரியும். முந்தைய நயன்தாராவின் படங்களிலிருந்து இது மாறுபட்டுஇருக்கும். ஒவ்வொரு சமையல் கலைஞரையும் படம் பெருமைப்படுத்தும். சமையல் வெறும் கலை அல்ல, அது விவசாயம் போல் தெய்வீகமானது என்று இப்படத்தில் சொல்கிறோம்.

# ‘புஷ்பா 2’–வுக்காக அல்லு அர்ஜுன் சம்பளம் எவ்வளவு?



**ஹைதராபாத் : நவ. 28,**

**சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா, பஹத் ஃபாசில் உட்பட பலர் நடித்த படம் ‘புஷ்பா’.**

இந்தப்படத்துக்கு தேவிஸ்ரீ பிரசாத் இசை அமைத்திருந்தார். நடிகை சமந்தா ஒரு பாடலுக்கு ஆடியிருந்தார். கடந்த 2021-ம் ஆண்டு வெளியாகி வெற்றி பெற்ற இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் இப்போது உருவாகி வருகிறது. படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

முதல் பாகத்தை விட இரண்டாவது பாகத்தை அதிக பட்ஜெட்டில் உருவாக்கி வருகின்றனர். இந்நிலையில் இந்தப் படத்தில் நடிப்பதற்கு அல்லு அர்ஜுன் சம்பளம் பெறவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது. படத்தின் மொத்த வருமானத்தில் 33 சதவிகிதம் சம்பளமாக வாங்க ஒப்பந்தம் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதிக எதிர்பார்ப்பை கொண்டிருக்கும் இந்தப்படம் கண்டிப்பாக ரூ.1000 கோடி வசூலை எட்டும் என்றும் அதனால் அல்லு அர்ஜுனுக்கு ரூ. 330 கோடி சம்பளம் கிடைக்கும் என்று தெலுங்கு சினிமாவில் கூறிவருகின்றனர். இதுகுறித்து தயாரிப்பு தரப்பில் ஏதும் தெரிவிக்கவில்லை. இது உண்மை என்றால் தென்னிந்திய சினிமாவில் அதிக சம்பளம் வாங்கும் நடிகராக அல்லு அர்ஜுன் இருப்பார் என்கிறார்கள்.

# ‘காந்தாரா: சாப்டர் ஒன்’ ஃபர்ஸ்ட் லுக் டீசர் வெளியானது



**பெங்களூரு : நவ. 28,**

**ரிஷப் ஷெட்டி நடித்து பெரும் வரவேற்பைப் பெற்ற ‘காந்தாரா’ படத்தின் இரண்டாம்பாகத்தின் ஃபர்ஸ்ட் லுக் டீசர் வெளியாகியுள்ளது.**

ரிஷப் ஷெட்டி நடித்து, இயக்கிய படம் ‘காந்தாரா’. கிஷோர், சப்தமி கவுடா உட்பட பலர் நடித்திருந்தனர். ஹோம்பாலே பிலிம்ஸ் தயாரித்தது. தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளிலும் இப்படம் வரவேற்பை பெற்றது. ரூ.16 கோடி செலவில் தயாராகி ரூ.400 கோடி வசூலித்து சாதனை படைத்தது. இதன் 2-ம் பாகம் உருவாகும் என்று படக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படத்துக்கு ‘காந்தாரா எ லெஜெண்ட்: சாப்டர் 1’ என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தையும் ரிஷப் ஷெட்டியே இயக்கி, நாயகனாகவும் நடிக்கிறார். டீசரில் கையில் திரிசூலத்துடன் உடல் முழுவதும் ரத்தத்துடன் தோன்றுகிறார் ரிஷப் ஷெட்டி. ஹோம்பாலே பிலிம்ஸ் நிறுவனம் இதனைத் தயாரிக்கிறது. நடிகர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த விவரங்களை படக்குழு விரைவில் அறிவிக்க உள்ளது.

# வரலாறு உலகம்

## ‘இதுதான் போரின் 3 இலக்குகள்’
## காசாவில் ராணுவ வீரர்களை ஊக்கப்படுத்திய இஸ்ரேல் பிரதமர்



**இஸ்ரேல் : நவ. 28,**

**இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு காசாவிற்கு சென்று, போரின் மூன்று இலக்குகளை ராணுவ வீரர்களுக்கு எடுத்துரைத்துள்ளார்.**

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் பல நாடுகளின் முயற்சியால் நான்கு நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மூன்றாவது நாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, காசா பகுதிக்கு நேரில் சென்றிருந்தார். அப்போது, அங்கு உள்ள பாதுகாப்பு அமைப்பு குறித்து கேட்டறிந்ததோடு, வீரர்களுடன் உரையாடினார். கண்டுபிடிக்கப்பட்ட ஹமாஸ் அமைப்பினரின் சுரங்கங்களில் ஒன்றை ஆய்வு செய்தார். தொடர்ந்து. ஹமாஸுக்கு எதிரான நாட்டின் நடவடிக்கைகள் வெற்றி பெறும் வரை தொடரும் என்று, நேதன்யாகு வலியுறுத்தியதாகவும் இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ராணுவவீரர்கள்மத்தியில் உரையாற்றியபோது நேதன்யாகு 3 இலக்குகளை வலியுறுத்தியுள்ளார். அதன்படி, "ஹமாஸை ஒழிப்பது, பணயக்கைதிகள் அனைவரையும் திரும்பப் பெறுவது மற்றும் காசா மீண்டும் இஸ்ரேல் அரசுக்கு அச்சுறுத்தலாக மாறாது என்பதை உறுதிப்படுத்துவது" போரின் முக்கிய இலக்குகள் என நேதன்யாகு வலியுறுத்தியுள்ளார். அதோடு, "பணயக்கைதிகளை மீட்பதற்கான இடைவிடாத முயற்சிகள் எடுக்கப்படும். நாங்கள் இறுதிவரை - வெற்றி வரை தொடருவோம். எதுவும் எங்களைத் தடுக்காது, போருக்கான எங்கள் இலக்குகள் அனைத்தையும் அடைவதற்கான வலிமை, சக்தி, விருப்பம் மற்றும் உறுதிப்பாடு எங்களிடம் உள்ளது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இதைத்தான் நாங்கள் செய்வோம்" என்றும் நேதன்யாகு சூளுரைத்துள்ளார். காசா நகரில் நேதன்யாகு, ஐடிஎஃப் துணைத் தலைவர் மற்றும் தளபதிகளுடனும் கலந்துரையாடியுள்ளார். இது தொடர்பான புகைப்படங்களையும் அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

போர் நிறுத்தத்தின் அடிப்படையில் ஹமாஸ் அமைப்பினரால் சிறைபிடிக்கப்பட்ட பணயக் கைதிகள் தற்போது பல்வேறு கட்டங்களாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் இஸ்ரேலியர்கள் மட்டுமின்றி தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் ரஷ்யா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நபர்களும் உள்ளனர். கடந்த 7ம் தேதி ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் பெற்றோரை இழந்த, அமெரிக்காவைச் சேர்ந்த 4 வயது சிறுமியும் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த போரில் ஹமாஸ் அமைப்பினரால் சிறைபிடிக்கப்பட்ட அமெரிக்கர்களில் விடுவிக்கப்பட்ட முதல் நபர் அந்த சிறுமி என்பது குறிப்பிடத்தக்கது.

## 4 வயது அமெரிக்க சிறுமியை விடுவித்த ஹமாஸ்
## ஜோ பைடனின் அடுத்த நம்பிக்கை



**பாலஸ்தீனம் : நவ. 28,**

**ஹமாஸ்- இஸ்ரேல் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஹமாஸ் அமைப்பினர் தாங்கள் பிடித்து வைத்திருந்த பிணைக்கைதிகளை ரிலீஸ் செய்து வருகிறார்கள். நான்கு நாள் போர் நிறுத்தத்தின்போது, ஒவ்வொரு நாளும் 13 இஸ்ரேலியர்கள் என்ற அடிப்படையில் பிணைக்கைதிகளை விடுவிக்கின்றனர்.**

அதே வேளையில் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாட்டினரையும் விடுவித்துவருகின்றனர். அந்த வகையில நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 3-வது கட்டமாக 13 இஸ்ரேலியர்கள், அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு சிறுமி உள்பட நான்கு வெளிநாட்டினர் என 17 பேரை விடுவித்தது. அமெரிக்காவைச் சேர்ந்தவர் 4 வயது சிறுமியாகும். அவரது பெயர் அபிகெய்ல் ஈடன். இவர் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் குடியுரிமை பெற்றவர். கடந்த மாதம் 7-ந்தேதி ஹமாஸ் பயங்ரகவாதிகள் இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியபோது, இவரது வீட்டிற்குள் நுழைந்து தந்தை மற்றும் தாயை சுட்டுக் கொன்றுள்ளனர்.


அப்போது பக்கத்து வீட்டில் சென்று தஞ்சம் அடைந்துள்ளார் அபிகெய்ல் ஈடன். பக்கத்து வீட்டிற்குள்ளும் நுழைந்த பயங்கரவாதிகள் அந்த குடும்பத்துடன் இவரையும் சேர்த்து பிணைக்கைதிகளாக பிடித்துள்ளனர். அந்த வீட்டில் இருந்து மூன்று குழந்தைகள், குழந்தைகளின் தாய் மற்றும் ஈடன் ஆகிய ஐந்து பேரும் காணாமல் போனர். பின்னர் பிணைக்கைதிகளை பிடித்துச் செல்லப்பட்டது தெரியவந்தது. இந்த நிலையில் அபிகெய்ல் ஈடன் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவரது குடும்பத்தைச் சேர்ந்த இருவர், அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன், "கடவுளுக்கு நன்றி, அந்த சிறுமி வீட்டில் இருக்கிறார். அவளை கட்டிப்பிடித்து சந்தோகத்தை வெளிப்படுத்த அங்கே இருக்க விரும்புகிறேன். அவள் இஸ்ரேலில் பத்திரமாக இருக்கிறாள்" எனத் தெரிவித்துள்ளார். மேலும், போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டு இன்னும் அதிகமான பிணைக்கைதிகளை விடுவிக்கப்படுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். பின்னர், அமெரிக்காவில் உள்ள அந்த சிறுமியின் குடும்பத்துடன் பேசியதாகவும், இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகுவிடமும் பேசியதாகவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்திய நேரப்படி இன்று காலை 10.30 மணியுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவடைகிறது. அதனைத் தொடர்ந்து தாக்குதலை தொடர்வோம் என இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு தெரிவித்துள்ளார். இதற்கிடையே, ஒவ்வொரு 10 பிணைக்கைதிகளை விடுவிக்க ஒருநாள் போர் நிறுத்தம் நீட்டிக்கப்படும் என இஸ்ரேல் தெரிவித்துள்ள நிலையில், அதற்கான முயற்சிகளை மத்தியஸ்தரராக செயல்பட்டு வரும் கத்தார் மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு இஸ்ரேலியர் விடுதலைக்கும் 3 பாலஸ்தீனர்களை ஜெயிலில் இருந்து விடுவிக்க இஸ்ரேல் சம்மதம் தெரிவித்தது. அதன்படி 39 இஸ்ரேலியர்கள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், 117 பாலஸ்தீனர்களை சிறையில் இருந்து இஸ்ரேல் விடுவித்துள்ளது. நான்கு நாள் போர் நிறுத்தத்தின்போது 50 பிணைக்கைதிகளை விடுவிக்க ஹமாஸ் சம்மதம் தெரிவித்தது. அதற்குப் பதிலாக இஸ்ரேல் சிறையில் உள்ள 150 பாலஸ்தீனர்களை விடுவிக்கவும், கசாவிற்கு மனிதாபிமான உதவிகள் சென்றடையவும் இஸ்ரேல் சம்மதம் தெரிவித்தது.

## தாய்லாந்தில் கோலாகலமாக நடைபெற்ற குரங்குகள் திருவிழா



**தாய்லாந்து : நவ. 28,**

**தாய்லாந்து நாட்டில் பாரம்பரிய குரங்குகள் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.**

தாய்லாந்து நாட்டின் லோப்புரி நகரில் குரங்குகளுக்கு நன்றி செலுத்தும் திருவிழா ஆண்டு தோறும் நவம்பர் மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படுவது வழக்கம். குரங்குகளுக்கு நன்றி தெரிவிக்கும் இந்த ஆண்டின் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில், அப்பகுதி மக்கள் குரங்குகளுக்கு விதவிதமான உணவுகளை சமைத்து விருந்தாக படைத்தனர்.

அப்போது குரங்குகளுடன் அவர்கள் விளையாடவும் செய்தனர். அந்த பகுதி மக்கள் மட்டுமின்றி அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வந்திருந்த சுற்றுலாப் பயணிகளும் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

2,000-க்கும் மேற்பட்ட குரங்குகள் அப்பகுதியில் ஒரே நேரத்தில் குவிந்து உணவுகளை உண்டு ருசித்தன. அந்நாட்டின் சுற்றலாத் துறையின் வளர்ச்சிக்காகவும் இந்த திருவிழா வெகு விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது.

## கனடாவில் அடுக்குமாடி குடியிருப்பில் துப்பாக்கிச்சூடு – 3 பேர் பலி



**ஒட்டாவா : நவ. 28,**

**துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 2 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

கனடா நாட்டின் மனிடொபா மாகாணம் வினிப்பெக் நகரில் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று அதிகாலை துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடைபெற்றது. அதிகாலை 4 மணியளவில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு குறித்து போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் அடுக்குமாடி குடியிருப்பில் துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 2 பேரை மீட்டனர். ஆனால், இந்த துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

இதனை தொடர்ந்து படுகாயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்த போலீசார், துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு

## போர் நிறுத்த நீட்டிப்புக்கு தயார் என அறிவித்தது ஹமாஸ்



**காசா : நவ. 28,**

**சண்டை நிறுத்த நீட்டிப்புக்கு தயாராக இருப்பதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. அக்டோபர் 7-ம் தேதி தொடங்கிய ஹமாஸ்- இஸ்ரேல் போரானது ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து வருகிறது.**

பலமுறை தற்காலிக சண்டை நிறுத்தத்திற்கு சர்வதேச சிவில் மற்றும் மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்தும் அதற்கு இஸ்ரேல் செவிசாய்க்கவில்லை. இஸ்ரேல், காசா மீது நடத்தி வரும் தாக்குலில் இதுவரை குழந்தைகள், பெண்கள் உள்பட 13,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். காசா மக்கள் மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேலுக்கு எதிராக பலர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த கொடூரத் தாக்குதலைத் தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட இஸ்ரேல் அரசு சூளுரைத்தது. அதற்காக காசா பகுதியை முற்றுகையிட்டு மிகக் கடுமையாக குண்டு வீச்சு நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம், தரைவழியாகவும் அந்தப் பகுதிக்குள் நுழைந்து தாக்குல் நடத்தி வருகிறது. இதற்கிடையே, பிணைக் கைதிகளை விடுவிப்பதற்காக சர்வதேச நாடுகளின் உதவியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. இதில், சில பிணைக் கைதிகளை மட்டும் விடுவிக்கப்பட்டனர்.

அந்த வகையில், பிணைக் கைதிகளை விடுவிக்க ஏதுவாக, 4 நாட்களுக்கு போரை நிறுத்துவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு 22ம் தேதி அறிவித்தார். அதோடு, 50 பிணைக் கைதிகள் விடுவிக்கப்படுவர். அதே வேளையில், இஸ்ரேல் சிறையில் இருந்து 150 பாலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தகவல் வெளியானது. அதாவது இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன பெண்கள், குழந்தைகள் விடுவிக்கப்படுவார்கள் என்று கத்தார் தெரிவித்தது.

இதனையடுத்து இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான தற்காலிக போர் நிறுத்தம் நவம்பர் 24ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது. போர் நிறுத்தம் 4 நாட்கள் அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், எகிப்தின் ரபா எல்லை பகுதியில் இஸ்ரேலிய பிணைக்கைதிகள் 13 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில், சண்டை நிறுத்த நீட்டிப்புக்கு தயாராக இருப்பதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினருக்கு இடையே ஏற்பட்ட 4 நாள் தற்காலிக சண்டை நிறுத்த உடன்படிக்கையின்படி காசாவில் இரு தரப்பினரின் தாக்குதல்களும் இடைநிறுத்தம் செய்யப்பட்டன.

மேலும் இரு தரப்பிலிருந்தும் பிணைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். அத்துடன் காசா வாழ் மக்களுக்கு மனிதநேய உதவிகள் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டது. இந்நிலையில் நான்கு நாள் சண்டை நிறுத்த நீட்டிப்புக்கு தயாராக இருப்பதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் காசாவில் இஸ்ரேலிய படை வீரர்களை சந்தித்துப் பேசிய நெதன்யாகு, ஹமாஸ் அமைப்பினரை வெற்றி கொள்ளும் வரை சண்டைகள் நிறுத்தப்படாது என உறுதிபட தெரிவித்துள்ளார்.

## “எலான் மஸ்காகவே இருந்தாலும் குற்றம் குற்றமே” – ரிஷி சுனக்



**அமெரிக்கா : நவ. 28,**

**அக்டோபர் 7 அன்று துவங்கிய இஸ்ரேல்- ஹமாஸ் போர், 50 நாட்களை கடந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது. உலகெங்கும் இஸ்ரேலுக்கு ஆதரவாக பலரும், ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக பலரும் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.**

இந்நிலையில், சில தினங்களுக்கு முன் அமெரிக்காவின் பிரபல சமூக கருத்து பரிமாற்றல் இணைய வலைதளமான "எக்ஸ்" செயலியில், ஒரு பயனர், "வெள்ளையர்களுக்கு எதிராக யூதர்கள் வெறுப்பை தூண்டி விடுகிறார்கள்" என கருத்து பதிவிட்டிருந்தார். எக்ஸ் வலைதளத்தின் தற்போதைய நிறுவனரும், உலகின் முன்னணி கோடீசுவரர்களில் ஒருவருமான எலான் மஸ்க், இக்கருத்தை ஆமோதிக்கும் வகையில், "நீங்கள் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறீர்கள்", என பதிலளித்து பதிவிட்டிருந்தார்.

இது உலகெங்கும் உள்ள யூதர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அமெரிக்க வெள்ளை மாளிகை எலான் மஸ்க் கூறுவதை "வடிகட்டிய பொய்" எனவும் விமர்சித்திருந்தது. எலான் மஸ்கிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பல பன்னாட்டு நிறுவனங்கள் எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிடப்பட்டு வந்த தங்கள் விளம்பரங்களை குறைத்து கொள்ள தொடங்கின. இதனால் எக்ஸ் நிறுவன விளம்பர வருவாயும் குறைய தொடங்கியது. இவ்வருட இறுதிக்குள் அது பெரும் நஷ்டத்தை சந்திக்கும் என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

இங்கிலாந்தில் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன் உட்பட பல முக்கிய பிரமுகர்களும், பல்லாயிரக் கணக்கானோரும் பங்கேற்ற யூத எதிர்ப்பிற்கு எதிரான பேரணி ஒன்று நடைபெற்றது. இங்கிலாந்தில் நவம்பர் மாத தொடக்கத்தில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த மாநாட்டில் எலான் மஸ்க் மற்றும் ரிஷி சுனக் ஆகியோரின் சந்திப்பு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இப்பின்னணியில், தனது நிலைப்பாட்டை குறித்து ரிஷி சுனக் கருத்து தெரிவிக்க வேண்டும் என அந்நாட்டில் அவருக்கு ஊடகங்களில் அழுத்தம் தரப்பட்டு வந்தது.

இதை தொடர்ந்து ஒரு பேட்டியில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் இது குறித்து கருத்து தெரிவித்தார். அதில் அவர் கூறியதாவது: என்னுடன் பழகும் ஒவ்வொரு மனிதரும் கூறும் கருத்துக்களையும் ஆராயும் பழக்கம் எனக்கு இல்லை. ஆனால், யூதர்களுக்கு எதிரான வெறியையும், வன்முறை சம்பவங்களையும், அவர்களுக்கு எதிரான சித்தாந்தத்தையும் நான் எதிர்க்கிறேன். நீங்கள் சாலையில் செல்லும் யாரோ ஒருவரா அல்லது எலான் மஸ்கா என்பது குறித்தெல்லாம் எனக்கு கவலையில்லை. தகாத வார்த்தைகளால் பொய்யாக விமர்சிப்பது அனைத்து வகையிலுமே ஏற்க முடியாதது. எல்லா வகையிலுமே யூத எதிர்ப்பு என்பது முழுவதும் தவறு. இவ்வாறு சுனக் தெரிவித்தார்.

## அமெரிக்காவில் 3 பாலஸ்தீன மாணவர்கள் மீது துப்பாக்கிச்சூடு



**வெர்மான்ட் : நவ. 28,**

**துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த மாணவர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.**

அமெரிக்காவின் வெர்மான்ட் நகரில் 3 பாலஸ்தீன மாணவர்கள் மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த மாணவர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இருவருக்கு சம்பவ இடத்திலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் தீயணைப்புத் துறையால் வெர்மான்ட் பல்கலைக்கழக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், மூன்றாவது நபரும் அதே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் காவல் துறை தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமெரிக்க அதிகாரிகளுக்கு பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மலேசியாவிற்குச் செல்ல டிச.1 முதல் விசா தேவையில்லை : இந்தியர்கள் மகிழ்ச்சி



**மலேசியா : நவ. 28,**

**தாய்லாந்து, இலங்கையைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து மலேசியா சென்று வர விசா தேவையில்லை எனவும் டிசம்பர் 1-ம் தேதி முதல் இந்த நடைமுறை அமலுக்கு வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

மலேசியாவிற்குச் செல்லும் சுற்றுப்பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக புதிய நடைமுறை அறிமுகம் செய்வதாக அந்நாட்டின் பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக மேலும் அவர் குறிப்பிட்டதாவது, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, சீனா மற்றும் இந்தியாவைச் சேர்ந்தோர் இனி விசா இன்றி மலேசியாவுக்குள் நுழையலாம். இந்தியா, சீனாவைச் சேர்ந்தவர்கள் மலேசியாவில் விசா இன்றி 30 நாள்கள் வரை தங்கலாம்.

புதிய நடைமுறை அடுத்த மாதம் (டிச.1) ஒன்றாம் தேதி முதல் நடமுறைக்கு கொண்டுவரப்படும். விசா தேவயில்லை என்றாலும் பயணிகள் குற்றப்பின்னணி அல்லது வன்முறையில் ஈடுபட்டிருக்கின்றனரா என்பதை அறியப் பாதுகாப்புச் சோதனைகள் நடத்தப்படும். இந்தியாவை விட சீனாவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுப்பயணிகள் மலேசியாவிற்கு வர அதிக வாய்ப்புள்ளது எனக் குறிப்பிட்டார்.

## பல்கேரியாவில் கடும் பனிப்பொழிவால் இயல்பு வாழ்க்கை முடக்கம் போக்குவரத்து பாதிப்பு, 1000 வீடுகளில் மின்சாரம் துண்டிப்பு



**சோபியா : நவ. 28,**

**பல்கேரியாவில் நிலவும் கடும் பனிப்பொழிவால் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளது.**

பல்கேரியாவில் கடந்த சில நாட்களாகவே பனிபொழிவின் தாக்கம் அதிகரித்துள்ளது. வர்ணா, வேலிஹோ உள்ளிட்ட பகுதிகளில் 36 செ.மீ. முதல் 40 செ.மீ. அளவிற்கு பனிப்பொழிவு உள்ளது. சோபியா பகுதிகளில் 30 செ.மீ. அளவிற்கு பானிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. சாலைகள் முழுவதும் பனிக்கட்டிகள் நிரம்பியுள்ளதால் போக்குவரத்துகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பலவேறு சாலைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். மேலும், ஆயிரம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வானிலை நிலைய அதிகாரி எச்சரிக்கை விடுத்திருந்தனர். கடும் பனிப்பொழிவும் சூறைக்காற்றும் நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பல்கேரிய தலைநகர் சோபியாவுடன் மோன்டானாயை இணைக்கும் ஒரே பாதையான பெட்ரோஹன் பாஸ் பகுதியில் சாலைப் போக்குவரத்து கடும் நெரிசலை சந்தித்தது. தலைநகர் சோபியாவில் பனிப்பொழிவால் சில் மரங்களும் சாலைகளில் சாய்ந்து கிடந்தன. மேலும், சாலைகளில் குவிந்துள்ள பனிக்கட்டிகளை அகற்றும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

## பிரான்ஸில் பெற்ற மகள்கள் 3 பேரை குத்தி கொன்ற கொடூர தந்தை



**பாரீஸ் : நவ. 28,**

**டையெப் என்ற வடக்கு கடலோர நகரில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று, 3 குழந்தைகளையும் கொன்ற விவரங்களை அவர் கூறியுள்ளார்.**

பிரான்ஸ் நாட்டில் பாரீஸ் நகரின் தென்கிழக்கே அமைந்த ஆல்போர்ட்வில்லே என்ற புறநகர் பகுதியில் வசித்துவரும் 41 வயதுடைய நபருக்கு 11, 10 மற்றும் 4 வயதில் 3 மகள்கள் இருந்தனர். இந்நிலையில், 3 மகள்களையும் அவர் கத்தியால் குத்தி கொலை செய்து உள்ளார். இதன்பின்பு தப்பியோடி விட்டார். அவர்களின் உடல்கள் வீட்டில் இருந்து கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

இதனை தொடர்ந்து, அவரை கைதுசெய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், டையெப் என்ற வடக்கு கடலோர நகரில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று, 3 குழந்தைகளையும் கொன்ற விவரங்களை அவர் கூறியுள்ளார்.

இதனை கேட்டு போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். இதன்பின்பு அவர் கைது செய்யப்பட்டார். அவர் காவலுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது என வழக்கறிஞர்கள் கூறியுள்ளனர். கடந்த 2021-ம் ஆண்டு குடும்ப வன்முறையில் ஈடுபட்டார் என்று அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது.



# சாதி வாரி கணக்கெடுப்பை மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது நடத்த வேண்டும்

# நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் 4-ல் கூடுகிறது





# 140 கோடி இந்தியர்கள் நலனுக்காக திருப்பதியில் பிரார்த்தனை செய்தேன்


சென்னை / புதுக்கோட்டை | 28.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**எச். வி. ஹண்டே** , தமிழக மருத்துவர், அரசியல்வாதி (பி.1927)



**அமர் கோசுவாமி** , இந்திய எழுத்தாளர், பத்திரிக்கையாளர் (பி.1945)



**வி. கே. வெள்ளையன்** , இலங்கை மலையகத் தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி (பி.1918) (இ.1971)



## இன்றைய நினைவு நாள்

**ஜோதிராவ் புலே** , இந்திய மெய்யியலாளர், செயற்பாட்டாளர் (பி.1827) (இ.1890)



**ஜேம்ஸ் நெய்ஸ்மித்** , கூடைப்பந்தாட்ட விளையாட்டைக் கண்டுபிடித்த கனடியர் (பி.1861) (இ.1939)



**என்ரிக்கோ பெர்மி** , நோபல் பரிசு பெற்ற இத்தாலிய-அமெரிக்க இயற்பியலாளர் (பி.1901) (இ.1954)



**பொ. ம. இராசமணி** , தமிழகத் தமிழறிஞர் (பி.1936) (இ.2009)

